# ஜாமக்காரன்
# JAMAKKARAN

VOLUME - 3 Reg NO.TNBIL/2016/70171 ISSUE - 3
MARCH 2019 TAMIL & MALAYALAM
ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=

*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



**கர்த்தருக்குள் அன்பான வாசகர்களுக்கு,**

**இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்து கூறுகிறேன்.**

2019 பிப்ரவரி மாத ஜாமக்காரன் வாசித்தவர்கள் ஒரு சிலரை தவிர மற்றவர்கள் யாரும் அதில் எழுதிய விஷயங்களை சீரியஸ்ஸாக எடுத்துக்கொள்ளவில்லை என்று உணருகிறேன். **இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக்குறித்து** நம் வேதம், கூறிய எச்சரிப்பு, அந்த வசனத்தின்படி நடக்கும் இயற்கை மாற்றங்கள் தினசரி நடக்கும் கொலைகள், மரணங்கள் பாலியல் பலாத்காரம் ஆகியவைகள் உச்சநிலையடைந்து 9 மாத குழந்தைகளும் கற்பழித்து கொல்லப்படுவது மனித புத்திக்கு எட்டாத **குரூரமாக** காணப்படவில்லையா? இந்தியாவில் ஒன்று இரண்டு இடங்களில் அப்படி நடந்தது என்று அல்லாமல் வடஇந்தியா தொடங்கி-தென்குமரி வரை அப்படிப்பட்ட குரூர கொலைகள் நடந்ததாக அறிகிறோம். T.V.& பத்திரிக்கை செய்திகளை காணும்போது **உலக முடிவை** நெருங்கிவிட்டோம் என்ற பயம் கிறிஸ்தவ சபை மக்களில் காணப்படாததுபோலவே காணப்படுகிறது. கடந்த மாதம் CSIயில் **நுழையபோகும் ஆபத்து** என்ற தலைப்பில் CSI **மாடரேட்டர்** அவர்கள் எழுதிய நவீன உபதேச **அறிவிப்புகளையும்** ஒரு பொருட்டாக எண்ணவில்லை என்று தோன்றுகிறது. கிராம மக்கள் தினத்தந்தி நாளிதழலில் தினமும் நடிகைகளின் கிசு கிசு செய்திகள், வெட்டினான்-குத்தினான் என்பதையும் அரசியல் கட்சி தலைவர்களின் கட்சி தாவல் இவைகளையும் ஆவலோடு பார்க்க விரும்புவதைபோல், இன்று கிறிஸ்தவர்களும் நான் எழுதும் **எச்சரிப்புகள்**, அறிவிப்புகளை வாசித்து **ரசிக்க** தொடங்கிவிட்டார்கள். இந்த மாதம் ஜாமக்காரனில் டாக்டர் எந்த ஊழியகாரனைப்பற்றி தாக்கி எழுதினார் என்று அறியவே சிலர் ஆசைப்படுகின்றனர். ஜாமக்காரன் ஒரு பொழுதுபோக்கு பத்திரிக்கைப்போல சிலர் நினைத்துவிட்டனர். அப்படிப்பட்டவர்களை நினைத்து என்ன சொல்வதென்று தெரியவில்லை!

# MARCH - 2019

நம் CSI **சபைக்குள்** அந்திக்கிறிஸ்துவின் ஆட்கள் நுழைந்துவிட்டார்கள். மேலும் கிறிஸ்தவ T.V நிகழ்ச்சி மூலம் **அந்திக்கிறிஸ்துவின் ஆட்களின் சுகம்பெற்ற பொய் சாட்சிகள் பெருகிவிட்டன.**

**அன்னிய பாஷை, தீர்க்கதரிசனம்** என்று தினசரி T.Vயில் அறிவிக்கும் **கட்டுகதைகள்** மூலம் ஸ்டார் ஊழியர்கள் மக்களை மூளை சலவை செய்துவிடுகின்றனர். ஆனால் அதன் பின்விளைவுகளைப்பற்றிய சிந்தனையோ பயமோ நம் **வாசகர்கள் பலரிடம்** காணமுடியவில்லை.

❖ என் வாசகர் குடும்பத்தினரில் ஒருவர் என்னோடு ஒரு நாள் தொலைப்பேசியில் பேசினார் அப்போது அவர்கள் பேசும் போது **இயேசு அழைக்கிறார்** T.V. நிகழ்ச்சியில் எங்கள் **குடும்ப போட்டோ** வெளியிடப்படுகிறது. எங்கள் **பிள்ளைகளின் பிறந்தநாளுக்காக** சகோ.**பால் தினகரன்** ஜெபிக்கிறார் என்றார்கள். இப்படி கூறியவர்கள் நன்றாக படித்த, உயர்ந்த பதவியில் வேலை செய்பவர்களின் குடும்பம் ஆகும். பல வருடங்களாக என் ஊழியத்தையும் காணிக்கைஅனுப்பி தாங்கும் குடும்பம் ஆகும். ஆனால் இவர்கள் இவ்வளவு முட்டாள்தனமாக இருப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை. T.Vயில் **இயேசு அழைக்கிறார்** குடும்பத்தினர் இவர்களுக்காக ஜெபிக்கிறார்கள் என்றால் இலவசமாகவா ஜெபிப்பார்கள்? அவர்கள் **ஸ்டார் ஊழிய வியாபாரி**களாயிற்றே பணம் பெறாமல் இலவசமாக ஜெபிக்கமாட்டார்களே! நான் கேட்டேன் உங்களுக்கு ஆட்சேபம் இல்லையானால்TVயில் ஜெபிக்க சகோ.பால் தினகரனுக்கு காணிக்கை எவ்வளவு கொடுத்தீர்கள் என்று சொல்ல முடியுமா?என்றேன் தயங்கி தயங்கி தொகையை கூறினார்கள்! என் உள்ளம் தொய்ந்துபோயிற்று. அனேக ஆண்டுகள் இவர்கள் என்னோடு பழகிய குடும்பம், ஓரளவு ஆவிக்குறிய விழிப்புணர்வு பெற்றிருப்பார்கள் என்று நினைத்தேன். மேலும், அவர்களின் பெற்றோர் ஓய்வுபெற்ற ஆயர் குடும்பம், அவர்களின் தாத்தா பலரால் அறியப்படும் ஜெபிக்கும் பக்தியுள்ள குடும்பம். இவர் தாத்தா அந்த காலத்தின் ஆசிரியரும், சபையின் கேட்டிசிஸ்ட்டாகவும் ஊழியம் செய்தவர். இப்படிப்பட்ட பக்தியுள்ள குடும்ப வழியில் வந்த இந்த நல்ல குடும்பம் தங்கள் குடும்ப போட்டோ T.V யில் காட்டப்படுவதை விரும்புகிறார்களே, அதோடு **பால்தினகரன்** மனம் உருகி இவர்களுக்காக T.V.யில் ஜெபிப்தையும் அதை நம் கர்த்தர் கேட்பார் என்றும் இவர்கள் நம்புகிறார்களே! இதை அறியாமை என்று கூற முடியுமா? வேறு இரண்டு குடும்பங்கள் **இயேசு அழைக்கிறார்** TV நிகழ்ச்சிக்கு இவர்களைப்போல் **போட்டோ** அனுப்பி பணமும் அனுப்பிவிட்டார்களாம். ஆனால் இந்த இரண்டு குடும்பத்தினரின் போட்டோவையும் இவர்களுக்கே திருப்பி அனுப்பினார்களாம். உங்களுக்காக T.V நிகழ்ச்சியில் ஜெபிக்க இயலாது. நீங்கள் கடிதம் எழுதுங்கள் அல்லது E-mail வழியாக எழுதுங்கள். ஜெபம் உடனே ஏறெடுக்கப்படும்-பதில் தாமதமாகதான் உங்களுக்கு எழுதி அனுப்பமுடியும் என்று எழுதிவிட்டர்களாம். அது அச்சடிக்கப்பட்ட கடிதமும் அதில் **பால் தினகரனின்** அச்சடிக்கப்பட்ட கையெழுத்தும் இருந்ததாம். அந்த கடிதத்தில் மேலும் அவர்கள் குறிப்பிட்டதாவதுT.Vயில் வெளியிட ஏராளமான **படங்கள்** வந்ததாலும் குறிப்பிட்ட தேதிக்குள் அத்தனை பேர்களுக்கும் ஜெபிக்க இயலாததாலும் நீங்கள் அனுப்பிய **போட்டோ** உங்களுக்கு திருப்பி அனுப்படுகிறது. போட்டோவில்உள்ள உங்கள் குடும்பத்துக்காக ஜெபித்தபின் தான் இப்படம் உங்களுக்கே திருப்பி அனுப்படுகிறது. பொருத்துக்கொள்ளவும் என்று எழுதி, உங்களுக்காக ஜெபிக்கும்போது கர்த்தர் கொடுத்த வாக்குதத்தம் என்று ஒரு வசனத்தை குறிப்பிட்டிருந்தார்கள். எங்களுக்கு மனதுக்கு விசனமாக இருந்தது. இது பெரும் ஏமாற்றத்தை கொடுத்துவிட்டது.

தங்கள் முகங்கள் எங்கள் குடும்ப போட்டோவை T.Vயில் உலகமே பார்த்திருக்க வேண்டியது

ஆனால் படம் வெளியிடப்படவில்லை என அறிந்தபோது எங்கள் பிள்ளைகள் சோர்ந்து போனார்கள். இதில் முக்கியமாக கவனிக்கவேண்டியது இவர்களின் **போட்டோ மட்டும்** திருப்பி அனுப்பட்டது. ஆனால் இவர்கள் **அனுப்பிய பணத்தின் காசோலை** திருப்பி அனுப்பவில்லை. பிறகு எங்கள் சபையில் சிலரிடம் இதைக்குறித்து விசாரித்தபோது நீங்கள் அனுப்பிய தொகை மிகக்குறைவு. குறைவான தொகைக்கெல்லாம் உங்கள் போட்டோவை **இயேசு அழைக்கிறார்** T.V சேனலில் வெளியிடமாட்டார்கள் என்றார்களாம். அதற்கு இவர்கள் குறைந்தபட்சம் எவ்வளவு ஆயிரம் அனுப்பவேண்டும் என்று எங்களுக்கு தெரிந்திருந்தால் நிச்சயம் அந்த தொகையை அனுப்பியிருப்போம் என்றார்கள்.

இப்படிப்பட்ட ஊழியக்கார **வியாபாரிகளை** நம்புகிற ஒரு பெரும் கூட்டம் திருநெல்வேலி, தூத்துக்குடியில் கேரளத்திலும் இருக்கும்போது நம் CSI சபையில் **ஆணோடு-ஆண்** திருமணம் நடந்தால் என்ன? **பெண்ணோடு-பெண்** திருமணம் செய்தால் நமக்கென்ன? என்று தான் நினைப்பார்களே தவிர, திருச்சபைக்குள் நுழைய இருக்கிற நவீன உபதேசத்தின் ஆபத்தை-அசிங்கத்தைப்பற்றியெல்லாம் இப்படிப்பட்ட CSI கிறிஸ்தவர்களுக்கு உள்ளத்தில் எந்த தாக்கமும் உண்டாக வழியில்லை. சபையில்உள்ள மற்றவர்களே 3rd Gender மூன்றாம் பாலினத்தவர் கையிலும் சபையில் பொருப்புகளை கொடுத்தால் நம் வாலிப பிள்ளைகள் பலவிதத்தில் பாதிக்கப்படுவார்களே என்ற பயம் இல்லாமல்போயிற்றே!

- ☐ **சிலுவை வழி வேண்டாம்** என்று இயேசுகிறிஸ்துவை தடுத்த பேதுருவை அப்பாலே போ **சாத்தானே** என்று இயேசு கூறினார். அதைப்போல நானும் **அந்திக்கிறிஸ்துவின்** செயல்களுக்கு துணைப்போன **பிஷப், மாடரேமட்டர்** ஆகியவர்களை **அந்திக்கிறிஸ்துவின் ஆட்கள்** என்று எழுதியதில் தவறில்லை என்று கருதுகிறேன்.

**"ஊத வேண்டிய சங்கை ஊதிவிட்டேன்-காதுள்ளவன் கேட்ககடவன்"** என்று இயேசு கூறியதைப்போல என் வாசகர்களுக்கு என்ன அறிவிக்க வேண்டுமோ அவைகளை அறிவித்து விட்டேன் என் கடமை முடிந்தது.

CSIயைப்பற்றிய விஷயங்களை நான் தொடர்ந்து ஜாமக்காரனில் எழுதியதால் **ஆவிக்குறிய தியான செய்திகளை எழுத இயலாமல்போனது.** அதனால் லட்சக்கணக்கான என் ஆவிக்குறிய வாசகர்கள் இந்தியாவிலும், வெளிநாட்டிலும் உள்ளவர்கள் **மிகவும் சோர்ந்து போனார்கள்,** ஜாமக்காரனில் இப்படிப்பட்ட பிரயோஜனமில்லாத விஷயங்களைத்தவிர நல்ல விஷயங்கள் வேறு ஒன்றும் இல்லையே என்று சலிப்பும் ஏற்பட்டுவிட்டது. பொருத்துக் கொள்ளுங்கள்.

CSI லூத்தரன் சபைகளைக்குறித்த எனக்குள் ஏற்பட்ட தனிப்பட்ட ஆவிக்குறிய பாரம் காரணமாக தொடர்ந்து சபை சம்பந்தமான பிரச்சனைகளை எழுத வேண்டியதானது.

- ☐ நம் வாசகர்களின் பிள்ளைகளின் பரீட்சைக்காக, வேலை விஷயமாக, திருமணவிஷயமாக தொடர்ந்து ஜெபிக்கிறேன். நீங்கள் எழுதிய ஜெபக்குறிப்புகளுக்காவும் ஜெபித்தேன்.
- ☐ நீங்கள் **வங்கி**வழியாகவும் MO,DD காசோலை வழியாகவும் அனுப்பிய காணிக்கையாவும் என் வங்கி கணக்கில் வந்து சேர்ந்தது, மிக்க நன்றி.
- ☐ ஜெபக்குறிப்புகள், மற்ற விவரங்களை எனக்கு அறிவிக்க **தொலைப்பேசி** வழியாக **கூறமுயல வேண்டாம்.** லைன் கிடைப்பது கடினம், கூடியவரை **கடிதம்** E-Mail வழியாக ஜெப விவரங்கள்எழுதி அறிவியுங்கள்.
- ☐ பலர் வங்கி வழியாக எனக்கு அனுப்பிய காணிக்கைகளுக்கு, அதை அனுப்பியவர்களின்

**விலாசம்** அறியாததால் **நான் பதில் எழுதவில்லை**, என்றாலும் என்மேல் அன்புகொண்ட, நம்பிக்கை கொண்ட வாசக குடும்பங்கள் **என் பதில் கிடைக்காமல்**போனாலும் தொடர்ந்து காணிக்கைகளை எனக்கு அனுப்பி என்னை தொடர்ந்து **தாங்குவதை** நினைத்து பெருமைப்படுகிறேன்.

☐ நடைபெறப்போகும் **இந்திய** நாட்டு **பார்லிமெண்ட்** தேர்தலுக்காக ஜெபியுங்கள். குறிப்பாக **U.P.,மத்தியபிரதேசம், ஒடிசா,பீகார்** போன்ற மாநிலங்களுக்காக ஜெபியுங்கள்.

குறிப்பாக தமிழ்நாட்டில் **கன்னியாகுமரி மாவட்ட** M.P.தேர்தலில் கடந்த முறை கிறிஸ்தவர்களுக்குள் ஒற்றுமை இல்லாததால் **காவி கட்சி** தமிழ் நாட்டிலேயே ஒரே ஒரு இடத்தில் M.P தேர்தலில் ஜெயித்தது. அதன் விளைவை கன்னியாகுமரி மாவட்ட கிறிஸ்தவர்கள் மறக்கமாட்டார்கள் என்று நம்புகிறேன். அவர் ஜெயித்ததால் போலீஸ் முழுவதும் **காவிகட்சியின்** கட்டுபாட்டில் வந்தது. விளைவு புதிய **கிறிஸ்தவ சபைகள்** கட்டமுடியவில்லை. **ஆராதனை** நடத்த முடியவதில்லை, **ஞானஸ்தானம்** பகிரங்கமாக கொடுக்கமுடியாமல்போனது, புதிய சபைகள் கடந்த நான்கு வருடமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் கட்ட முடியவில்லை.

❖ **இசேு அழைக்கிறார்** சகோ. பால் தினகரன் **திரு.மோடி** அவர்களை நேரில் சந்தித்து தேர்தலில் தன் **ஆதரவும், ஜெபமும்** உங்களுக்கே என்று அறிவித்தாதாக வட இந்திய தினசரி செய்திதாள்களிலும், T.V.யின் மூலமாகவும் அறிந்திருப்பீர்கள்.

இன்றைக்கு தமிழ்நாட்டில் ஒவ்வொரு CSI டையோசிஸ்ஸீம் **பிஷப்மாரும்** விதவிதமான கட்சிகளை ஆதரிக்கும் பகிரங்க காட்சிகளை காண்கிறோம்.

❖ **கன்னியாகுமரி** CSI டையோசிஸ் ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு பின்னால் நிற்கிறது. **திருநெல்வேலியில்** 14 CSI சபைகளுக்கு மட்டும் பிஷப்பாக இயங்குபவர் **மற்றொரு ஊழல்** கட்சி தலைவர்களுடன் தன் ஆதரவை தெரிவிக்கிறார். **கேரளாவில்** தெற்கு கேரளா CSI டையோசிஸ் **கம்யூனிஸ்ட் கட்சிக்கு** சில வருடங்களுக்கு முன்பாகவே தன் ஆதரவை தெரிவித்து அந்த கட்சிக்காக **தேர்தல் பணியும்** செய்ததை அறிவோமே! இந்தியா கிறிஸ்தவர்கள் தான் ஒரு இந்தியனாகத்தான் காட்டிக்கொள்ளவேண்டும். **ஓட்டுபோடும்** போது அவரவர் மனதில் எந்த கட்சியில்உள்ள நல்ல ஆட்களை தெரிந்தெடுக்கிறார்களோ, அது அவர்களின் தனிப்பட்ட உரிமை. ஆனால் வெளிபடையாக எந்த கட்சியையும் சார்ந்தவர்களாக இருக்கக்கூடாது.

☐ அப்படியே **பிஷப்** எலக்ஷனிலும் பிஷப் பதவிக்கு யார் **பணம் கொடுத்து** வெற்றி பெறுகிறார்களோ **கர்த்தர் அவர்கள்கூட இருக்கமாட்டர்.** அந்த பிஷப் பொருப்பேற்ற சபையும் **ஆவிக்குறிய சபையாக** இயங்க இயலாது.

ஜாமக்காரன் வாசகர்கள் பாரத தேசத்தின் தேர்தலுக்காகவும் CSI திருமண்டல பிஷப் தேர்தலுக்காவும் ஜெபிக்க கடமைபட்டுள்ளோம். **கன்னியாகுமரி,வெல்லூர்,ஆந்திராவில் இரண்டு பேராயம்,கிழக்கு கேரளா டையோசிஸ்களுக்கு** தேர்தல் நடைபெற இருக்கிறது. ஜெபிப்போம் நானும் ஜெபிக்கிறேன். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

**கர்த்தரின் உன்னத பணியில்**
**✍ டாக்டர்.புஷ்பராஜ்**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# திருமணம் என்ற தெய்வ ஒழுங்கை ஒழிக்க போகும் உறவுமுறை (LIVING TOGETHER)


**- (FMPB-KERITH)**

பழங்காலத்தில் **திருமணம்** என்பது பெரியவர்களால் பார்த்து நிச்சயிக்கப்பட்ட ஒரு நிகழ்வாகவும், பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளபடி, **மனிதன் தனிமையாயிருப்பது நல்லதல்ல** என்று தேவனே அவனுக்கு ஒரு துணையை ஆதியிலே ஏற்படுத்திக் கொடுத்து, திருமண வாழ்வில் ஆணும்- பெண்ணும் எப்படி வாழ வேண்டும் என்ற நடைமுறை சட்டத்திட்டங்களையும் வகுத்து கொடுத்ததின்படியும் ஆதிகாலம் முதற்கொண்டே மக்கள் வாழ்ந்து வந்ததனர். ஆனால் நவீனகாலத்தில் **நாகரீகம்** என்ற போர்வையில் மறைமுகமாக சத்துரு செய்யும் கொடிய பாவ காரியம் தேசங்களில் மிக வேகமாக பரவி வருவதால், வழக்கத்திற்கு மாறாகவும், **தேவ கட்டளையை மீறியும்** ஒரு ஆணும்-பெண்ணும் **திருமணம் செய்து கொள்ளாமலேயே சேர்ந்து வாழலாம்,** அப்படி வாழ்வதால் அவர்களுக்கு அதிகமான நன்மைகளே தவிர தீமை ஒன்றும் இல்லை என்று கூறிக்கொண்டு, ஆண்களும், பெண்களும் **சுதந்திரமாக தங்கள் இஷ்டத்துக்கு வாழ** தெரிவு செய்யப்பட்ட முறையே Living Together என்று அழைக்கின்றனர்.

இவர்கள் கூறும் காரணம் என்னவென்றால் **திருமணம்** என்ற கட்டாயத்துக்குள் வரும் போது தங்கள் **சுதந்திரம் பறிக்கப்படுகிறது** என்கின்றனர் Modern சமுதாயத்தினர். Want to Live Without Commitment என்கின்றனர் Living Together Couples//Living Together என்பது திருமணத்தின் Trail Version எனவும் கூறிக் கொள்கின்றனர். வடஇந்தியாவில் பணித்தளங்களில் ஊழியம் செய்யும் மிஷனெரிகள் அங்குள்ள படிப்பறிவு இல்லாத ஆதிவாசி மக்களிடம் காண்பதும் இப்படிப்பட்ட காரியமே. அதாவது அங்குள்ள அநேக விதவிதமான **ஜாதி மக்களில்** வாலிப ஆண்களும், பெண்களும் திருமணத்திற்கு முன்னரே **ஒரு வருடம்** சேர்ந்து வாழ்ந்துவிட்டு அதன் பிறகு, அந்த பெண்ணை தனக்கு பிடித்திருந்தால் **திருமணம் செய்து கொள்வார்கள்.** இல்லையென்றால் அந்த பெண்ணை அப்படியே விட்டுவிட்டு **வேறு பெண்ணை** திருமணம் செய்து கொள்வார்கள் என்று கூறக் கேட்டியிருக்கிறோம். இது இன்றைக்கும் வட மாநிலங்கள் பலவற்றில் நடைமுறையில் உள்ளதைக் காணலாம். அதைப்போலவே இந்த Living Together கலாச்சாரமும் இருப்பதாகப் பார்க்கிறோம். இக்கலாச்சாரத்தில் இருக்கும் வாலிபர்கள் கூறுவது என்னவென்றால், இதன் பலன் யாருக்கும் புரியவில்லை என இக்கால வாலிபர்கள் ஆதங்கப்படுகிறார்கள் Modern Youth. இவர்கள் இன்றளவும் இவ்வுறவால் எவ்வளவு அழிவுகள் ஏற்படுகின்றன என்பதை ஆராயும் மனநிலை இல்லாமல் வாழ்கின்றனர். அநேகர் இது சரியே, என்று பச்சைக் கொடி பிடிக்கின்றனர்.

Living Together ல் வாழும் தம்பதியினரின் பரிதாப நிலையைப் பார்த்தால், **ஒரு கட்டத்தில் உறவுகள் துண்டிக்கப்படும்போது அனாதைகளாக,** எந்த உறவுகளின் **ஆதரவும் இல்லாமல் நிற்கின்றனர்.** இவர்களுக்கு **பிறக்கும் குழந்தைகளின் நிலைமையும் கேள்விக்குறியே!**

75% Living Together Couples அநேக Stress மன அழுத்தம் மற்றும் சமாதானமற்ற சூழ்நிலையில் வாழ்கின்றனர் என்று ஆய்வு கூறுகிறது. சிறிய சிறிய காரணங்களுக்கும் சண்டை, சண்டை என்று சந்தோஷமில்லாத சூழலில் வாழ்கின்றனர். Living Togetherயை தேர்வு செய்பவர்கள் ஆர்வமாக அதில் தான் பிரவேசித்தவுடன் அதில் வரும் பிரச்சனைகளைக் கண்டு மிகவும் சோர்ந்து, பயந்து, வாழ்க்கையை இழந்து அதிலிருந்து விடுபட்டு செய்வதறியாது திகைத்துக் காணப்படும். வாலிபர்களை நம் அன்றாட வாழ்கையிலேயே காணலாம், சில மனநிலை பாதிப்புக்கும் உள்ளாகின்றனர்.




Media, IT, Insurance, Business, மற்றும் மருத்துவத்துறைகளில் வேலை செய்பவர்களே Living Together வாழ்கையை அதிகமாக தேர்வு செய்கின்றனர். பன்னாட்டு நிறுவனங்களில் பணிபுரிந்து, வெளிநாட்டுத் துரித உணவுகளுக்குப் பழகிக்கொண்ட அவர்களுக்கு அந்நிய கலாச்சாரமும் தப்பாகத் தெரியாததில் ஆச்சரியமில்லை. இது **குடும்பம் எனும் அமைப்பிற்கு** எதிரான ஒன்று என இவர்கள் நினைத்துக்கூட பார்ப்பதில்லை. இன்றளவிலும் அநேக தற்கொலைக்கு Living Together காரணமாகிறது. **சரியில்லாத** வெளிநாட்டு **உணவைக்கூட** நம் **மண்ணுக்கு ஏற்றவிதமாக** மாற்றிப் **பக்குவப்படுத்துவது நம் இயல்பு.** ஆனால் ஆகார விஷயத்தை நம் நாட்டுக்கு ஏற்ற விதத்தில் மாற்றிக்கொள்ளும். இவர்கள் இப்படிப்பட்ட **தவறான உறவுமுறைகளில் மட்டும் தங்களை மாற்றிக்கொள்ள மனதில்லாமல்** இவர்கள் தங்களைத்தாங்களே **ஏமாற்றி கொள்கின்றனர்.**

**தேவன் மனிதனைப் படைத்தது,** குடும்பமாய் **தேவனை ஆராதிக்கவும்,** அவருடைய நாமத்தை **மகிமைப்படுத்தவுமே. "நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம்"** (யோசுவா 24:15) என்று யோசுவா கூறியதுபோல, கர்த்தரை சேவிப்பவர்களாய் வேதத்தின்படி நடந்து பரிசுத்தமாய் வாழ்வோம். எனவே இப்படிப்பட்ட தீய பழக்கவழக்கத்திற்கு தங்களை செவிசாய்த்து வாழ்வோர் மனந்திரும்பவும், வாலிபர்கள் இவ்வித தீய பழக்கத்திற்கு உட்படாதபடி தேவ நீதியைக் காத்துக்கொள்ள விழிப்புணர்வைப் பெறவும் ஜெபிப்போம்.

**ஜாமக்காரன்:-** அதுமட்டுமல்ல, பெற்றோர், பிள்ளைகளை அடிக்கடி இப்படிப்பட்ட விஷயங்களை வெளிப்படையாக பிள்ளைகளிடம் பேசி அவர்களை எச்சரிப்பது அவர்களின் நடவடிக்கைகளை கவனிக்க ஏற்பாடு செய்வது அவர்களிடம் காலையும்-இரவும் தொலைப்பேசியில் தொடர்புக்கொண்டு எச்சரித்து தொலைபேசியிலேயே ஜெபித்துவிடுவது.

பிள்ளைகள் தங்களை பாதுக்காத்து கொள்ளவும் சூழ்நிலையில் விழாமல் ஜாக்கிறதையாக இருக்கவும் அடிக்கடி பேசும் தொடர்பு நபர்களை அறிந்துக்கொள்ளவும். பிள்ளைகள் வழிவிலகிபோகாமல் இருக்க உதவும். இது ஒவ்வொரு பெற்றோர்களின் கடமையாகும்.

**ஜெபக்குறிப்புகள்:** ☐ Living Together உறவு முறைகளில் வாழும் ஒவ்வொருவரும் அவர்களின் **சுய இச்சை களிலிருந்து** விடுபட ஜெபிப்போம்.

☐ **நாகரீகம்** என்ற போர்வையில் மறைமுகமாக சத்துரு செய்யும் கொடிய பாவ காரியம் தேசங்களில் மிக வேகமாக பரவி வருகிற சூழ்நிலை மாற ஜெபிப்போம்.

☐ திருச்சபையிலுள்ள வாலிபர்களுக்கு Living Together குறித்த விழிப்புணர்வைக் கொடுத்து, இப்பாவபழக்கத்திற்கு தங்களை விலக்கிக் காத்துக்கொள்ள ஜெபிப்போம்.

**இந்திய உச்சநீதிமன்றம்** இதற்கு **அங்கீகாரம் வழங்கியுள்ளதை** விரைவில் **ரத்து செய்ய ஜெபிப்போம். இப்படிப்பட்ட பாவத்துக்கு மனித உரிமை என்ற பெயர் வைத்து நியாயப்படுத்துகிறார்கள்.**

☐ இக்கலாச்சாரத்தினால் பாதிக்கப்பட்டு செய்வதறியாது மிகவும் **மன அழுத்தத்தில்** வாழும் மக்களுக்கு தெய்வீக சமாதானமும், மறுவாழ்வும் கிடைக்க ஜெபிப்போம்.

☐ பணத்திற்காகவோ, பொருளுக்காகவோ, உல்லாசத்திற்காவோ சமூக நெறிகளை மீறாதபடி தங்கள் பரிசுத்ததைக் காத்துக் கொண்டு வருங்கால சந்ததியை உருவாக்க வேண்டும் என்ற விழிப்புணர்வைப் பெற ஜெபிப்போம்.

☐ இவர்கள் வெளி உலகத்துமுன் குறிப்பாக நம் கிறிஸ்து சபையில் குறிப்பிட்ட இப்படிபட்டவர்களைப் பார்த்து நீங்கள் **கணவன்-மனைவியா** என்ற கேள்விக்கு அவர்கள் பதில் செல்லாமுடியாததால் குற்ற உணர்ச்சியினால் சபை ஆராதனைக்கும் அவர்களால் பங்கு கொள்ள முடியவில்லை. தங்களை Mr.&Mrs. என்று வெளிப்படையாக அவர்களால் கூற முடியவில்லை. இப்படிபட்டவர்களுக்கு பிள்ளைகள் பிறந்தால் பள்ளியில், சேர்க்கும் போது இவர்கள் தங்களை **பெற்றோர்** என்று அறிமுகப்படுத்த மிகவும் யோசிக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களினால் **ஜெபிக்க** முடியவில்லை... **வேதம்** வாசிக்க முடியவில்லை! ஏன்... தங்களை **கிறிஸ்தவர்கள்** என்று கூட கூற முடியாமல் தவிக்கிறார்கள். சீக்கிரம் இப்படிப்பட்டவர்கள் இந்த ஆழ் நிலையிலிருந்து வெளிவரவும் தன் குடும்பத்தோடுள்ள உறவுகளை புதிப்பிக்கவும் இவர்களுக்காக ஜெபிப்போம்.

☐ குறிப்பாக வெளிநாடுகளில் வேலைக்காக சென்றவர்கள் இப்படிப்பட்ட பிரச்சனைகளில் அகப்பட்டு தன் சொந்த தாய் நாட்டுக்கு வந்து தங்கள் பெற்றோரையோ, உறவினர்களையோ பார்க்க வந்து போக தயங்குகிறார்கள். பெற்றோர்களின் மரணத்தின் அடக்க ஆராதனைக்கு கூட வர தயங்குகின்றனர். இப்படிப்பட்ட பலர் **சரீர உறவின்** சந்தோஷத்தில் **சலிப்பு** ஏற்பட்ட சில காலங்களில் **டிப்ரஷன்** போன்ற **மனநோயில்** அகப்பட்டு **அனாதை பிணமாக** வெளிநாட்டிலேயே அடக்கம் செய்யப்படுகின்றனர். என்ன பரிதாபம்! தேவன் நமக்கு அருளிய **ஒரே ஒரு வாழ்கையை** இழந்து பிள்ளைகளோடுள்ள சந்தோஷ வாழ்வினை இழந்து கர்த்தரின் உறவிலிருந்து விலகி, கர்த்தர் இல்லாமலே மரித்தும் போகின்றனர். இது எத்தனை பரிதாபம்!. இந்த செய்தி இப்போதுள்ள வாலிப பிள்ளைகளுக்கும் இவர்களை வளர்த்த பெற்றோர்களின் அலட்சியத்துக்கும் ஒரு எச்சரிப்பாகும்.

# வாலிபர்களுக்கான செய்தியும் - ஆலோசனையும்....

**(குறிப்பு: UESI** என்பது வாலிப பிள்ளைகளுக்காவும் குறிப்பாக கல்லூரி மாணவர்களுக்காவும் நடத்தப்படும் ஊழியமாகும் **"தரிசன சுடர்"** என்ற (UESI) அவர்கள் நடத்தும் பத்திரிக்கையில் அதன் ஆசிரியர் எழுதிய கட்டுரை ஆகும். வாசகர்களின் வாலிப பிள்ளைகளுக்கு நிச்சயம் இந்த செய்தி பிரயோஜனமாக இருக்கும்.)

**அன்பான வாலிப பிள்ளைகளே!**

Whatsapp, Facebook என எங்கு பார்த்தாலும் அன்பின் உணர்ச்சியைத் தெரிவிக்க Heart Symbolஐ அள்ளி வீசுகிறோம். இதன் பின்னணியைத்தைக்குறித்துப் பல விவாதங்கள் இருந்தாலும் 14ஆம் நூற்றாண்டின் மருத்துவர்கள் **இருதயத்தின் உட்பகுதியைச் சித்தரிக்க** இந்த அடையாளத்தைப் பயன்படுத்தி உள்ளனர். **இருதயம்** சரீரத்தின் ஒரு முக்கியப் பாகம் ஆகும் அதைபோல **அன்பும்** இருதயத்தைப்போலவே முக்கியமானதாகக் கருதப்படுகிறது. கல்லூரிகளிலே, ஏன் பள்ளிக்கூடங்களிலேயே பல மாணவர்கள் **"இதயத்தைத் தொலைத்து விட்டேன்". "என் இதயத்தைத் திருடிக்கொண்டாய்"** எனக் காதல் கவிதைகளில் தொடங்கி காலப்போக்கில் **கண்ணீர் கதைகளாக மாறிப்போன சோகக் கதைகள்தான்** எத்தனை! எத்தனை!

எதிர்பாலரோடு (Other Sex) உள்ள ஈர்ப்பு **இயற்கையாக தேவன் நம் சரீரத்தில் கொடுத்த அமைப்பு ஆகும்.** ஆனால் **திருமண வயதிற்குமுன்பே** பொங்கிவரும் ஈர்ப்பு ஒரு **மாயையான உணர்வு** (Infactuation) என்பதை இளம் உள்ளங்களுக்குச் சொல்லிக் கொடுப்பது நமது பொறுப்பு.

**இருபாலருக்கிடையில்** இருந்த **இடைவெளி குறைந்து,** இப்போதெல்லாம் **இணைந்தே கல்வி** கற்கும், கலந்தாலோசிக்கும், **நடைமுறைப் பயிற்சி** (Project) செய்யும் பாடத் திட்டங்களும் வந்துவிட்டன. இந்நிலையை சரியாகக் **கையாளத்தெரியாமல் தடுமாறும் மாணவர்களுக்குத்** தோள்கொடுத்து, அவர்களை அவர்களாகவே ஏற்றுக்கொண்டு, தேவையுள்ள பகுதிகளில் உதவுவதே நமது மாணவ ஊழியத்தின் இரகசியம்.

**"என் இதயம் யாருக்குத் தெரியும், என் வேதனை யாருக்குப் புரியும், என் தனிமை, என் சோர்வுகள், யார் என்னைத் தேற்றக்கூடும்"** என்ற இளைய சமுதாயத்தின் இதயக் குமுறலைக் கேட்டவர்களாய், இதயத்தைப் படைத்தவரும், **இதயத்தின் எண்ணங்களை யெல்லாம்** அறிந்தவரும், இதயத்தைச் சுத்திகரித்து, புதுப்பிக்கும் **இதய மருத்துவர் இயேசு கிறிஸ்துவை** அறிமுகப்படுத்திடுவோம்.

**ஜாமக்காரன்:-**

மேலே மாணவர்கள் படிப்பு சூழ்நிலையை (UESI) ஆசிரியர் எழுதினார் அதை தொடர்ந்து நானும் மாணவ-மாணவிகளுக்கு ஆலோசனையாக எழுதப்பாரப்படுகிறேன். ஆசிரியர் மேலே எழுதியதுபோல இப்போதைய நவீன கால படிப்பு சூழ்நிலை மிகவும் மாறுப்பட்ட நிலையில் உள்ளது.

இந்த சூழ்நிலையை இனி மாற்ற இயலாது. ஆனால் இயேசுவை நேசிக்கும் இயேசுவின்

பிள்ளையாய் வாழ ஆசைப்படும் பிள்ளைகளை மட்டும் தங்களை பாதுகாத்துக்கொண்டு சாட்சியுள்ளவர்களாய் வாழ்ந்து படித்து முன்னேறவேண்டும்.

டீன் ஏஜ்ஜில் பழகும்போது ஏற்படுவது **காதல்** அல்ல. அது இந்த குறிப்பிட்ட வயதில் வரும் **காமஉணர்ச்சி**(Sex Feeling) ஆகும்.

13லிருந்து 19வரை உள்ளவர்களை **டீன் ஏஜ் பிள்ளைகள்** என்று கூறுவர். இந்த குறிப்பிட்ட வயதில் சரீரத்தில் **ஹார்மோன் மாற்றம்** காரணமாக **காம உணர்ச்சி** கட்டுக்கடங்காமல் கொப்பளித்து **சரீர பாவம்** செய்ய துடிக்கும். இந்த குறிப்பிட்ட வயதினர் இந்த காலகட்டத்தில் மிகவும் ஜாக்கிறதையாக இருக்கவேண்டும்.

**டீன் ஏஜ்** என்பது முன்பெல்லாம் 13ம் வயதிலிருந்து தொடங்கும் என்று கூறுவதுண்டு ஆனால் இப்போது நவீன கால உணவு பழக்க மாற்றங்களால் நம் சரீரத்தில் 13ம் வயதில் ஏற்பட வேண்டிய **உணர்ச்சி மாற்றங்கள்** 9வயதிலே தொடங்கிவிடுகிறது. குறிப்பாக பிராய்லர் **சிக்கன்** (போந்தா கோழி) சாப்பிடுபவர்களுக்கு சீக்கிரம் சரீர மாற்றங்கள் தொடங்கிவிடுகிறது.

கோழி பண்ணை வைத்திருப்பவர்கள் கோழி சீக்கிரம் பெரிதாக வளரவும், கோழியின் எடை கூடவும் வேண்டி முட்டையிலிருந்து குஞ்ஜி வெளிவந்த **இரண்டாம் நாளே** அதற்கு Steroyed ஸ்டிராய்ட் என்ற மருந்தை ஊசி மூலம் காலில் செலுத்துவார்கள். உடனே அந்த குஞ்சிகள் மாயாஜாலம்போல கிடுகிடு என்று பெரிதாக குண்டாக வளர்ந்துவிடும். இது நாட்டு கோழியைவிட மிருதுவாகவும், ருசியாகவும் இருக்கும். பிராய்லர் முட்டையும் அப்படியே உருவாக்கப்படுகிறது.

நம் உடலில் இயற்கையாகவே **ஸ்டிராய்ட்** Steroyed என்ற வேதியல் பொருள் சுரக்கிறது. இந்த குறிப்பிட்ட Broyler **சிக்கன்** சாப்பிடும்போது சரீரத்தில் **ஸ்டிராய்ட்** இரண்டு மடங்கு கூடிபோகும். அதனால் தான் **பெண்பிள்ளைகள்** 8வயதில் அல்லது 9வயதில் **வயதுக்கு வந்து விடுகிறார்கள்**. அப்படியே ஆண் பிள்ளைகளும் 9வயதிலேயே **காம உணர்ச்சி** பெருகிவிடுகிறது. ஆகவே இவர்களை பிஞ்சிலேயே பழுத்துவிட்டார்கள் என்று கிராமங்களில் கூறுவதை கேட்கிறோம்.

ஆகவே பிள்ளைகளை வளர்க்கும் பெற்றோர் இந்த 8வயது, 9வயது பிள்ளைகளை அண்ணன், தங்கையானாலும் **ஒன்றாக படுக்கவிடாமல்** தனித்தனியாக படுக்கவைத்துவிட வேண்டும். மேலும் இந்த வயதிலிருக்கும் பிள்ளைகளுக்கு பரிசுத்த வாழ்கையை குறித்த போதனையை வேதத்திலிருந்து அவர்களுக்கு உபதேசிக்கவேண்டும். **ஜீனியர்** வயது பிள்ளைகளுக்கான ஆவிக்குறிய கூட்டங்களில் பங்கெடுக்க பெற்றோர் ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதனால்தான் வேதம் பிர12:1ல் "உன் **வாலிப வயதிலே** உன் **சிருஷ்டிகரை நினை"** என்று ஆலோசனை கொடுக்கிறது. இந்த குறிப்பிட்ட வயதுள்ள பிள்ளைகளை 3 பேர்கள் தேடி வருவார்கள்.

**1. அரசியல்வாதிகளுக்கு வாலிப பிள்ளைகள் தேவை. கம்யூனிஸ்ட்** நாடுகளில் சிறுவயதிலிருந்து 20 வயதுவரை **கம்யூனிஸ்ட் சித்தாந்தங்களை** சொல்லி கொடுப்பார்கள் இந்த வயதில் கம்யூனிச கொள்கை பிள்ளைகளில் பதிந்துவிட்டால் அதன்பின் எத்தனை வயதானாலும் இவர்கள்அந்த கம்யூனிஸ்ட் கொள்கைகளை மறக்கவே மாட்டார்கள். அதனால் தான் **ரஷ்யா, சீனா** போன்ற நாடுகளில் சிறுவயதிலிருந்து 21 வயது வரை **மத சம்பதமான** எந்த புத்தகத்தையும் படிக்க அனுமதிப்பதில்லை. **ஆகவே இந்த வயதுள்ள பிள்ளைகள்**

**அரசியல்வாதிகளுக்கு தேவை:**

2. **பிசாசுக்கு தேவை:** இந்த குறிப்பிட்டவயதினரை பிசாசு தேடி வந்து சிறுவயதிலே எல்லா பாவ பழங்களில் பழக வசதிகளை, **வாய்புகளை** வீட்டிலிருந்தே ஏற்பாடு செய்வான், பாவங்களை மறைவாய் கள்ளதனமாக பார்க்க வைத்து பழக வைத்துவிடுகிறான். அதன் பிறகு அந்த சிறுவர் சிறுமிகளே பலவித பாவபழக்க வழக்கங்களுக்கு அடிமையாகிப்போகிறார்கள்.

ஆகவே பெற்றோர் இப்படிப்பட்ட பிள்ளைகளை மிக ஜாக்கிறதையாக வளர்த்த வேண்டும். அந்த பிள்ளைகளின் பார்வையில் எந்த ஆபாசங்களும் பார்க்ககூடாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். வீட்டில் உள்ளவர்கள் தங்கள் வார்த்தைகளில் பாவம் உருவாகும் **வார்த்தைகளை** தங்களுக்குள் பேசமல், அந்த பிள்ளைகளின் பார்வையில் பாவ எண்ணங்கள் உருவாகும் எந்த செயல்களும் கண்ணில்படாமல் பாதுகாப்பது மிகவும் முக்கியம். சாதாரணமாக கூட்டுக் குடும்பங்களில் இத்தகைய சோதனைகள் மிக அதிகம்.

இவர்களை வளர்த்துபவர்கள் மற்ற பாலாருடன் எப்படி பழகுவது என்பதை சொல்லி கொடுக்கவேண்டும். வேதம் நமக்கு அருமையாக இதற்கான போதனைகளை ஆலோசனைகளை நமக்காக எழுதிகொடுத்துள்ளது.

பொதுவாக பிள்ளைகளுக்கு சொல்லித்தரவேண்டியது 1கொரி 7:1ல் எழுதியபடி **"ஸ்தீரியை தொடாமலிருப்பது மனிதனுக்கு நல்லது"**. எத்தனை நெருங்கின உறவினர்களானாலும் யாரும் ஒருவரை ஒருவர் **தொடாமல் பழகுவது** நல்லது. காரணம் நம் சரீரம் முழுவதிலும் உச்சன் தலைமுதல் உள்ளங்கால் வரை **உணர்ச்சி நரம்புகளால்** பின்னப்பட்டுள்ளது. **நம் கை** நம் சரீரத்தை தொட்டாலே உணர்ச்சிகள் தோன்றுவதை உணரலாம். ஆகவேதான் யாரும் யாரையும் **தொட்டுப்பேசாமல்** நம்மை பாதுகாத்துக் கொள்வது நல்லது.

இதற்கு நாம் ஆராதிக்கும் கர்த்தர் நமக்கு உதவி செய்ய **பரிசுத்த ஆவியானவரை** தானமாய் தந்தருளியிருக்கிறார். **பரிசுத்தத்தை** அருளவே **பரிசுத்த ஆவியானவரை** இயேசு நமக்கு தந்தருளியிருக்கிறார். அதனால்தான் அவருக்கு பெயரே **பரிசுத்த ஆவியானவர்.**

நீங்கள் வசனத்துக்கு கீழ்படிந்து சிறுவயதிலேயே மனம்திரும்புதலின் அனுபவதை பெற்றுக் கொண்டால் **பரிசுத்த ஆவியானவர்** நமக்குள் அருளப்படுகிறார். எபே1:13 வசனங்களில் இதை பார்க்கலாம்.

ஆகவே கர்தருக்கு உங்கள் **வாலிப வயதை** ஒப்புகொடுத்தால் கடைசிவரை உங்களை **பரிசுத்தத்தோடு** வாழச் செய்வார். வேத வசனம் உங்களை பரிசுத்தத்துக்கு நேரே வழி நடத்தும்.

அடுத்தது உங்கள் **கண்களை** எச்சரிகையோடு பாதுகாத்துக்கொள்வது நல்லது. **இருதயத்தில் வாசல் கண்** இந்த **கண்** வழியாக உள்ளே பிரவேசிப்பது எல்லாம் உன் முழுசரீரத்தையும் பாவத்தில் செயல்படுத்த ஊக்கப்படுத்தும். ஆகவே தாவீது கூறுவதுபோல் கர்த்தாவே என் **இருதயத்துக்கு ஒரு காவல்** வையும், என் **உதடுகளுக்கு காவல் வையும்,** அப்படியே என் **கண்களுக்கு காவல்வையும்**, இப்படி ஒவ்வொரு நாளும் ஜெபித்து அந்த நாளை தொடங்கினால் யாரும் பாவத்தில் விழாமல் பரிசுத்தமாய் வாழ முடியும்.

கர்த்தர்தாமே நம் வாலிபப்பிள்ளைகளை **யோசேப்பைப்**போல, **இயேசுவைப்போல** பரிசுத்தத்தோடு வாழ செய்வாராக!

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# தேவன் அமைத்த முதல் குடும்பம்

(சகோ:பிரகாஷ் ஏசுடையான்) நன்றி: சத்தியவசனம்.

நம்முடைய குடும்ப வாழ்க்கையைப்பற்றியும், வேதாகமத்தில் குடும்பத்தைப்பற்றி என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதைக் குறித்தும் நாம் சிந்திக்க இருக்கிறோம்.

பல இடங்களுக்கு ஊழியத்திற்காக போகும் போது அநேக குடும்பங்களிலே பலவித பிரச்சனைகள் நிமித்தம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறது. மேலும் குடும்பங்கள் **உடைக்கப்படுகிறது** என கேள்விப்பட முடிகிறது. குடும்பங்களிலே பிரச்சனைகள் இருக்கிறது என்பதற்காக அல்ல; பிரச்சனைகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நம்முடைய குடும்பத்தைப்பற்றி வேதம் என்ன சொல்லுகிறது என்றும், இப்படிப்பட்ட சூழ்நிலைகளிலே தேவன் நம்முடைய குடும்பத்தைப்பற்றி என்ன சொல்லி இருக்கிறார் என்றும் நாம் பார்க்கலாம்.

என்னுடைய நண்பர் ஒருவர் விமானத்தில் பிரயாணமாய் போய்கொண்டிருந்தபோது அவரோடுகூட பக்கத்திலே ஒரு பெண்மணி அமர்ந்திருந்தார்களாம். அங்கே ஆகாரம் பரிமாறப்பட்டபோது, நண்பர் ஆகாரத்தை வாங்கி சாப்பிட்டார். ஆனால் பக்கத்திலே இருந்த அந்த பெண்மணி சாப்பிடவில்லை. அப்பொழுது அவர், நீங்கள் ஏன் சாப்பிடவில்லை என்று கேட்டாராம். அப்பொழுது அந்த பெண்மணி, **நான் உபவாசம் இருக்கிறேன்** என்று சொன்னார்களாம்.

அப்பொழுது எனது நண்பர், இவர் கிறிஸ்தவராகத்தான் இருக்கவேண்டும் என்று நினைத்துக் கொண்டார். ஏனென்றால் கிறிஸ்தவர்களாகிய நாம்தான் **உபவாசம்** என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறோம் என்ற கருதிக்கொண்டு, நீங்கள் கிறிஸ்தவரா, நானும் ஒரு கிறிஸ்தவன் என்று அந்த பெண்மணியிடம் சொல்லியிருக்கிறார்.

அதற்கு அந்த பெண்மணி, கிறிஸ்தவத்திற்கும் எங்களுக்கும் சம்பந்தமே இல்லை என்றார்களாம்; ஆனாலும் நீங்கள் ஏன் உபவாசிக்கிறீர்கள் என்று கேட்டபொழுது, **கிறிஸ்தவ குடும்பங்கள் உடைக்கப்பட வேண்டும் என்பதற்காக எங்கள் தெய்வமான லூசிபரிடத்திலே, அதாவது பிசாசினிடத்திலே நாங்கள் விண்ணப்பம்பண்ணி உபவாசம் பண்ணுகிறோம்** என்று சொன்னார்களாம். இது ஒரு வேளை நமக்கு வேடிக்கையாகத் தோன்றலாம், ஆனால் உண்மையாக நமந்த ஒரு சம்பவம். இன்றைக்கும் **பிசாசை வணங்குகிற** ஒரு கூட்டத்து மக்கள் **கிறிஸ்தவ குடும்பங்கள்** உடைக்கப்பட வேண்டும் என்பதற்களாக தீவிரமாக செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால், **தேவன் எவைகளையெல்லாம் கட்டுவாரோ அவைகளையெல்லாம் உடைப்பதுதான் அவனுடைய (பிசாசின்) வேலை.** இன்றைக்கு திருச்சபை தாக்கப்பட்டு கொண்டிருக்கலாம். அதற்குக் காரணம் திருச்சபை என்பது தேவன் கட்டியெழுப்புகிற ஒரு நிறுவனம். அதேபோல குடும்பமும் தேவனாலே கட்டியெழுப்பட்ட ஒரு நிறுவனமாகும்.

# குடும்பத்தைப்பற்றிய தேவனுடைய நோக்கம்:

ஆதியாகமம் முதலாம் இரண்டாம் அதிகாரத்திலே **தேவன் ஆதியிலே வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்** என்று வாசிக்கிறோம். அதற்கு பிறகு **தேவன் ஒரு அருமையான ஒரு உலகத்தைப் படைத்தார். எல்லாவற்றையும் நல்லது, நல்லது என்றே கண்டார்** என்று வேதத்திலே வாசிக்கிறோம்.

ஆனால் இரண்டாம் அதிகாரம் 18வது வசனத்திலே, **பின்பு தேவனாகிய கர்த்தர் மனுஷன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல என்று கூறி ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்.** அப்படியென்றால், எல்லாவற்றையும் **நல்லது** என்று கண்ட தேவன் **மனிதன் தனியாய் இருப்பது நல்லதல்ல** என்று கண்டு அவனுக்கு **ஏற்ற துணையை** உண்டு பண்ணுவேன் என்று சொல்லி **ஏவாளை சிருஷ்டித்தார்** என்று பார்க்கிறோம். அப்படியென்றால் என்ன அர்த்தம், தேவன் மனிதனை உண்டாக்கியதின் அடிப்படையான நோக்கம் **உறவுக்காகத்தான்** என்பது தெளிவாகிறது.

தேவன் மிருகங்களைப் படைத்தார், மரங்களைப் படைத்தர், விண்ணிலே இருக்கிற பல விண்மீன்களைப் படைத்தார், இவைகளோடு மனிதன் உறவுகொள்ள முடியாது. மனிதன் பிறரோடு உறவு கொள்ளவேண்டும், அந்த உறவு முற்றுப்பெறவேண்டும் என்றால் **மனிதன் தனிமையாக இருப்பது நல்லதல்ல** என்று கண்டு அவனின் உறவுக்காக **ஏவாளைப் படைத்து** ஆதாமிடத்திலே கொண்டுவந்து இணைத்தார் என்று வேதத்திலே பார்க்கிறோம்.

முதலாவது, நாம் பார்க்கிற சத்தியம் என்னவென்றால், இந்த **குடும்ப வாழ்க்கை** என்பது **தேவனாலே நிறுவப்பட்டதாகும். குடும்பம்** என்பது தேவன் உலகத்திலே நிறுவின **முதலாவது நிறுவனம்** என்று நாம் சொல்லலாம். இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளுகிற காரியம் என்னவென்றால், தேவனுடைய மனதிலே அவருடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு தான் **குடும்பத்தைதான்** அவர் சிருஷ்டித்தார். **குடும்பத்தின் மூலமாகத்தான்** தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும் என்று தேவன் விரும்பினார்.

ஆகவேதான் ஆதாமை படைத்த தேவன் அவன் தனிமையாக இருப்பது நல்லதல்ல என்று கண்டு ஏவாளைப் படைத்தார் என்று பார்க்கிறோம். ஆதாமையும் ஏவாளையும் தேவன் படைத்தபொழுது (ஆதி26,27) "**பின்பு தேவன்: நமது சாயலாகவும் தமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் அனைத்து பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார். தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார்: அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்". ஆணும் பெண்ணுமாக அவர்களளை சிருஷ்டித்தார்".** இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளுகிற காரியம்: **தேவன் ஆணையும் பெண்ணையும் தம்முடைய சாயலிலே சிருஷ்டித்தார்** என்று பார்க்கிறோம்.

# ஆதாமுக்கு ஏற்ற துணை

வேதாகமத்தை நாம் பார்க்கும்போது ஏவாளை படைப்பதற்கு முன்பு ஆதாமுக்கு **அயர்ந்த நித்திரையை** வரப்பண்ணினார் என்று ஆதி.2:21 வசனத்திலே பார்க்கிறோம். ஏன் அவனுக்கு **அயர்ந்த நித்திரையை** வரப்பண்ணினார் என்ற கேள்வி நம் மனதிலே எழும்பலாம். அதற்கு எனக்கு பதில் தெரியாது. ஒருவேளை சிலர் சொல்லுவார்கள்; அவனுடைய விலா எலும்பை எடுத்து ஏவாளை சிருஷ்டித்தார். **அந்த அறுவை சிகிச்சை செய்வதற்கு** அவனுக்கு **அயர்ந்த நித்திரையைக்** கொண்டு வந்தார் என்று சொல்லுவார்கள். ஒரு வேளை அவ்வாறாகவும் இருக்கலாம். சிலர் இவ்வாறும் சொல்லுவதுண்டு: அன்றைக்கு ஒருவேளை **ஆதாம் விழித்துக்கொண்டிருந்திருந்தால்** அவன் கர்த்தர் ஏவாளை சிருஷ்டிப்பதை பார்த்திருந்தால் ஏவாளை **சிருஷ்க்க விட்டிருக்கவே மாட்டான்.** அவள் எப்படிப் பட்டவளாக இருக்கவேண்டும்! அவளுடைய **தோற்றம்** எப்படி இருக்க வேண்டும், **நிறம்** எப்படி இருக்கவேண்டும், **மூக்கு** எப்படி இருக்கவேண்டும், **கண்கள்** எப்படி இருக்கவேண்டும் என்று பல விதமான ஆலோசனைகளைக் கொடுத்துக் கொண்டிருந்திருப்பான். ஆகவேதான் தேவன் அவனுக்கு கனநித்திரையைத் தந்தார் என்று **வேடிக்கையாகக்** கூறுவதுண்டு.

☐ ஒருதம்பி அடிக்கடி தனது அப்பா அம்மாவுக்கு கடிதம் எழுதுவான். அந்த கடிதத்திலே அவன் சொன்னானாம்: என்னுடைய ஆகாரத்தை சமைத்து சமைத்து எனக்கு களைப்பாய் இருக்கிறது. **சமைக்கிற ஒரு இயந்திரம்** வேண்டும் என்று, அதற்கு பிறகு கொஞ்சநாட்கள் கழித்து எழுதினான், என்னுடைய ஆடைகளை துவைப்பது எனக்கு கஷ்டமாக இருக்கிறது. **எனக்கு துவைக்கிற இயந்திரம் (Washing Machine) வேண்டும் என்றான்,** அதற்குபின்பு கொஞ்ச நாட்கள் கழித்து எழுதினான், **வீட்டை சுத்தம்** செய்து செய்து எனக்கு களைப்பாய் இருக்கிறது, வீட்டை சுத்தம் செய்யும் **ஒரு இயந்திரம்** வேண்டும் என்று. இப்படியாக பலவிதமான **மிஷின்கள்** தனக்கு வேண்டும் என்று அவன் எழுதினதை அவர்கள் படித்தபோது அவனுடைய பிரச்சனையை புரிந்துகொண்டு உடனே அவனுக்கு **திருமணம்** ஒழுங்கு செய்துவிட்டார்கள்.

அதுபோல இன்றைக்கு சிலர் போல எண்ணுகிறதுபோல **மனைவி** என்பவள் **ஏதோ ஒரு இயந்திரம்** போன்றவள், வீட்டை சுத்தம் செய்பவள், **சமைப்பதற்காகவே சிருஷ்டிக்கப்பட்ட ஒரு பெண்** என்று எண்ணுகின்றனர். ஆனால் வேதத்தில் நாம் அப்படிப் பார்க்கவில்லை. ஆணையும் பெண்ணையும் தேவன் **தம்முடைய சாயலிலே** சிருஷ்டித்தார். உங்கள் மனைவியை **இரண்டாந்தர பிரஜைகளாக** நீங்கள் பாவிப்பீர்கள் என்று சொன்னால் அவரது சாயலின்படி படைத்த தேவனை நாம் அவமானப்படுத்துகிறோம் என்றாகிவிடும். ஆகவே **தேவன் இரண்டு பேரையுமே தமது சாயலிலே சிருஷ்டித்தார்** என்ற அடிப்படையிலே வாழ்வதற்கு உங்களை ஒப்புக்கொடுக்கவேண்டும். இந்த நாளிலே உங்களைத் தாழ்த்தி **கணவனும் மனைவியுமாக** இணைந்து தேவ சித்தத்தை நிறைவேற்ற வேண்டுமென்று உங்களை அர்ப்பணியுங்கள். அவர் உங்கள் குடும்ப வாழ்க்கையை ஆசீர்வதித்து மற்றவர்களுக்கும் ஆசீர்வாதமாக உங்கள் இருவரையும் மாற்றுவார்.

ஆனால் இதிலே இருக்கிற உண்மை என்னவென்றால்: தேவனை பரிபூரணமாக நாம் நம்பி கர்த்தர் என்னுடைய வாழ்க்கையிலே **ஏற்ற துணையைக் கொண்டுவருவார்** என்ற நம்பிக்கையோடு கூட நாம் அமைதலாக காத்திருக்க வேண்டும், தேவனை நாம் நம்ப வேண்டும்.

என்னை அழைத்த தேவன் நான் பாவத்திலே விழுந்தபோது என்னை மீட்பதற்காக சிலுவையிலே தமது உயிரைக் கொடுத்தார். இன்றைக்கு என்மூலம் என் வாழ்க்கையிலே கிரியை செய்து கொண்டிருக்கிற பரிசுத்த ஆவியானவராகிய திரித்துவ தேவன் என்மேல் அக்கறை உடையவராய் இருக்கிறார். **ஆகவே என் வாழ்க்கையிலே சிறந்த காரியத்தையே** அவர் செய்வார் என நம்பவேண்டும்.

இன்றைக்கு திருமண வாழ்க்கையிலே பலருக்கு பல விதமாக பிரச்சனைகள் இருக்கிறன்றன. சிலர் என்னுடைய பிள்ளைகளுக்கு வயதாகிக் கொண்டேபோகிறது, இன்னும் திருமணம் ஆகவில்லையே, அதற்காக ஜெபியுங்கள் ஐயா என்பார்கள்.

சிலர், **ஏற்ற துணையை** நீங்கள் கண்டுபிடித்து தாருங்கள் என்று ஊழியக்காரராகிய எங்களிடமே கேட்பதுண்டு. இன்னும் சிலர், நீங்கள் ஜெபித்து **ஆண்டவர் என்ன சொல்லுகிறார் என்பதைக் கேட்டு எங்களுக்கு சொல்லுங்கள்** என்பார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு நான் சொல்லுகிறது என்னவென்றால்; **முதலாவது தேவனை நீங்கள் நம்பவேண்டும். நம்முடைய தேவன் யார்? அவரை நாம் எப்படி நம்புகிறோம்! என்பதுதான் அடிப்படையான கேள்வியாகும்.**

**நம்முடைய தேவன் பெரியவர்! வானம் பூமி எல்லாவற்றையும் படைத்தவர். மனிதனையும் படைத்தவர், மனிதன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல என்று கண்ட தேவன் நம்முடைய வாழ்க்கையிலே சிறந்த காரியத்தையே செய்வார்.**

**தேவன் நமக்கு அதனதன் காலத்திலே சகலத்தையும் சிறந்த முறையிலே செய்கிறார்** என்று வேதாகமம் நமக்கு சொல்லுகிறது. ஆகவே நம்முடைய வாழ்க்கையிலே சிறந்த காரியத்தையே தேவன நமக்கு செய்வார் என்ற அடிப்படையிலே நாம் அவரை நம்ப வேண்டும். நம்பி **நம்முடைய வாழ்கையை** அவருக்கே அர்ப்பணிக்க வேண்டும். அர்ப்பணித்துவிட்டு **அமைதலாக காத்திருக்க வேண்டும்.** நம்முடைய **ஆவி, ஆத்மா, சரீரம் குடும்பம்** அனைத்தையும் அவருக்கு அர்ப்பணித்துவிட வேண்டும். அவர் மேல் நம்பிக்கை வைத்து அவருடைய வாக்குத்தத்தங்களைச் சார்ந்து நாம் அமைதலாக இருக்க வேண்டும்.

ஆங்கிலத்திலே சொல்வேனென்றால், **"We must trust God, Entrust our life to God and rest in His Promises".** இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கிற உங்கள் வாழ்க்கையிலே தேவனை நீங்கள் நம்புகிறீர்களா?

ஆதாம் அயர்ந்த நித்திரை பண்ணிக்கொண்டிருந்தபொழுது ஏவாளை படைத்து ஆதாமிடத்திலே கொண்டுவந்தார் என்று பார்க்கிறோம். அந்த இரண்டு பேரையும் இணைத்து அந்த **இரண்டு பேரும்** இணைந்து **ஒருவராக மாறினார்கள்.** இவ்வாறு **முதல் குடும்பம் உலகத்திலே உருவானது.**

ஒருமுறை இதே செய்தியை நான் பிரசங்கித்தபோது, ஒரு வாலிப தம்பி என்னிடத்திலே வந்தான். அண்ணன், நீங்கள் பண்ணின பிரசங்கம் நன்றாக இருந்தது. ஆனால் நீங்கள் கூறிய அந்த **உதாரணத்துக்கும்** எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னான். என்னவென்று கேட்டேன். ஆதாம்-ஏவாள் பற்றி நீங்கள் பேசினீர்கள். அன்றைக்கு **ஆதாம் கண் விழித்துப்** பார்த்தபோது அவனுக்கு முன் நின்றது **ஒரேயொரு ஏவாள்தான்.** ஆகவே தேவசித்தத்தைக் கண்டுபிடிப்பதிலே அவனுக்கு பிரச்சனையே இல்லை. உடனே அவளை ஏற்றுக் கொண்டான். ஆனால் இன்றைக்கு என் தலையைச் சுற்றிலும் **அநேக ஏவாள்கள் இருக்கிறார்களே!** யாரைப்போய் கண்டுபிடிப்பது? கல்லூரிக்குப் போனால் அங்கேயும் **அநேக ஏவாள்கள்** இருக்கிறார்கள்அல்லது **பஸ்டாப்பிற்குப்** போனால் அங்கேயும் அநேக **ஏவாள்கள்** இருக்கிறார்கள் அல்லது வாலிப கூட்டங்களுக்குப்போனால் அங்கே அநேக **ஏவாள்கள்** இருக்கிறார்கள் யாரைக் கண்டுபிடிப்பது என்று வேடிக்கையாக சொன்னான்.

இந்த விஷயத்திலே கர்த்தருடைய சித்தத்தைப் புரிந்துக்கொள்ளவேண்டுமென்று சொன்னால் **நாம் அவரை நம்பவேண்டும்.** அவருடைய பரிபூரண சித்தத்திற்கு நம்மை முழுமையாக அர்ப்பணிக்கவேண்டும். அவர் சிறந்த காரியத்தை நிச்சயமாக நமக்காகச் செய்வார் என்று சொல்லி நீங்கள் பொறுமையோடுகூட காத்திருக்கும்போது அவர் **அதினதின் காலத்தில்** சகலத்தையும் **நன்மையாகவே** நிறைவேற்றுவார்.

**மனிதன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல** என்று கண்ட தேவன் ஏவாளை சிருஷ்டித்தார் என்று பார்க்கிறோம். ஆகவே **ஏவாள் இல்லாதபடிக்கு மனிதன் பரிபூரணப்பட்டவன் அல்ல.** இதை நீங்கள் புரிந்துக்கொள்ளவேண்டும். அந்த குடும்ப வாழ்க்கையிலே மனிதன் மாத்திரம் தனியாய் அதை நடத்தமுடியாது என்பதை நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும். அதே வேளையில் மனைவியை ஒரு **இயந்திரத்தைப்போல** பாவிக்கக்கூடாது. **இந்த இடத்தில் மனைவிகளும் புரிந்துக்கொள்ள வேண்டியதை கவனிக்கவும். அவள் கணவனுக்கு** உதவி செய்ய **சிருஷ்டிக்கப்பட்டாள்** என்ற எண்ணத்தோடுகூட மனைவிகளும் **இருக்கவேண்டும்.** ஒரு மனிதன் என்னிடத்தில். **"ஆதாமுக்கு ஏற்ற துணையை தேவன் உண்டாக்கினார்; ஆனால் என் மனைவியோ எனக்கு துணையாக அல்ல; உபத்திரவத்தைக் கொடுக்கிறவளாக மாறிவிட்டாள் என்று சொன்னார்.**

நான் ஒன்றை உங்களுக்காக சொல்லுகிறேன். தேவன் **உபத்திரவத்தை ஒருகாலும்** படைக்கவில்லை, **துணையைத்தான்** படைத்தார் என்று அங்கே பார்க்கிறோம். ஆனால் சில மனைவிமார் சில கணவனுக்கு **உபத்திரவத்தை** கொடுக்கிறவாகவும் மாறிவிடுகிறார்கள் என்று நானும் அறிவேன். ஒருவேளை இந்த செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற **மனைவிமார்கள்** உங்களுடைய வாழ்க்கையிலே நீங்கள் உங்கள் கணவனுக்கு **உறுதுணையாக** இருக்காமல் உபத்திரவத்தையே கொடுக்கிறவர்களாக இருப்பீர்களானால் மனைவிமார்களே நீங்கள் இன்றைக்கு மனந்திரும்பி **தேவன்தான் எங்களை இணைத்தார்** என்ற உறுதியோடுகூட அவருக்கு உங்களை அர்ப்பணிக்கவேண்டும் அவரை நம்பி அவர் வாக்குத்தத்தங்கள்மேல் நம்பிக்கை வைத்து அமைதலாக காத்திருங்கள். தேவன் உங்கள் வாழ்க்கையில் அவருடைய

# சீர்கெட்ட உலகுக்கு சீர்மிகு நற்செய்தி (வேத பாடம்)

**Dr. உட்ரோ குரோல்** **நன்றி - சத்தியவசனம்**

பல நூற்றாண்டுகளாக எந்த ஒரு குறிக்கோளும் இல்லாது வாழ்ந்துக்கொண்டிருந்த உலகமானது. ஒரு காலத்தில் **யூத நாட்டை** நோக்கி தனது கவனத்தைத் திருப்பியது. பரி.லூக்கா எழுதிய நற்செய்தி நூலில் குறிப்பிடும் அக்காரியங்களை நாம் ஆராய்வோம். உலகை மாற்றியவரும் உங்கள் வாழ்விலும் ஒவ்வொரு மனிதரின் வாழ்விலும் மாற்றத்தைக் கொடுப்பவருமாகிய மாமனிதராக வந்த **இயேசுவின் சரித்திரத்தை எழுதிய லூக்கா என்பவர் யூதரல்ல.** அவர் இயேசுவின் **பன்னிரண்டு சீடர்களில் ஒருவருமல்லர்.** இயேசு செய்த காரியங்களை லூக்கா **நேரில் கண்டவருமல்லர்.** ஆனால், அவர் செய்த **அற்புதங்களை** உலகிற்கு ஒழுங்குபடுத்தித் தர விரும்பினார். **லூக்கா** என்பவர் ஒரு சிறந்த **மருத்துவர், அறிவியல் அறிஞர், வரலாறு** எழுதும் **ஆற்றல்மிக்கவர்.** இயேசுவின் வாழ்வில் நடந்தவற்றைக் **கண்ணாரக் கண்டவர்களது** சாட்சியங்களை வைத்து அவை யாவையும் **ஒழுங்காய் வரிசைப்படுத்தி** எழுத எண்ணினார். **உண்மைகளை வெளிச்சத்துக்குக்** கொண்டு வருவதைப்பற்றி அவர் நன்கு அறிந்தவர். லூக்கா திருமுழுக்கு முனிவர் **யோவான்** என்பவரது வாழ்விலிருந்து தனது நூலை ஆரம்பிக்கிறார். ஒரு குறும்படத்தின் ஆரம்பத்தைப்போல அது உள்ளது.

"மகா கனம்பொருந்திய தெயோப்பிலுவே, நாங்கள் **முழுநிச்சயமாய் நம்புகிற சங்கதிகளை,** ஆரம்பமுதல் **கண்ணாரக்கண்டு** வசனத்தைப் **போதித்தவர்கள் எங்களுக்கு ஒப்புவித்தபடியே** அவைகளைக் குறித்துச் சரித்திரம் எழுத அநேகம் பேர் ஏற்பட்டபடியினால், ஆதிமுதல் எல்லாவற்றையும் **திட்டமாய் விசாரித்தறிந்த** நானும் உமக்கு உபதேசிக்கப்பட்ட விசேஷங்களின் நிச்சயத்தை நீர் அறிவேண்டுமென்று, அவைகளை **ஒழுங்காய்** உமக்கு உழுதுவது எனக்கு நலமாய்த தோன்றிற்று" என்று முன்னுரையாக எழுதுகிறார் (லூக் 1:1-4).

**இரண்டாயிரத்து பத்தொண்பது வருடங்கள்** அவர் இயேசுவின் சரித்திரத்தை எழுதி ஆண்டுகளாகிவிட்டாலும் இவரது குறிப்புகளில் ஒன்றுகூட மாற்றங்களோ **முரண்பாடுகளோ** இல்லை. மேலும் அந்நிகழ்வுகளுக்கு **இவர் நேரடி சாட்சியல்ல.** ஆனால், அக்கரியங்களைக் **கண்ணால் கண்டவர்கள்** லூக்காவிடம் கூறிய தங்களது சாட்சியில் தெளிவாக இருந்தனர். உதாரணமாக இயேசுவைப் பற்றி **யோவான் கூறியது,** "அந்த **வார்த்தை மாம்சமாகி,** கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், **நமக்குள்ளே வாசம்பண்ணினார்;** அவருடைய **மகிமையைக் கண்டோம்;** அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய **மகிமைக்கு** ஏற்ற **மகிமையாகவே இருந்தது**" (யோவா.1:14) என்று கூறுகிறார்.

"**தேவன்** மாம்சத்திலே வந்தார் என்றும் **அந்த மாம்சத்தை நான் கண்டேன்** என்றும் **சாட்சியிடுகிறார்.**" நாங்கள் **தந்திரமான கட்டுக்கதைகளைப்** பின்பற்றினவர்களாக அல்ல, அவருடைய **மகத்துவத்தைக் கண்ணாரக்கண்டவர்களாகவே** நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் **வல்லமையையும்** வருகையையும் **உங்களுக்கு அறிவித்தோம்**" என்று அப்.**பேதுரு** குறிப்பிடுகிறார் (2 பேதுரு 1:16). **நான் கண்டேன்;** இயேசு செய்தவைகளை **நான் கண்ணாரக் கண்டேன்**, அவர் **பேசியதை நான் கேட்டேன்,** அவர் **என்னுடன் பேசினார்,** எனது வாழ்வில் **துன்பங்கள்** வந்தன. அந்த **துன்பங்கள்** என்ன என்பதை **நான் நன்கு அறிவேன்.** நீங்களும் **அறிய வேண்டும் என நான் விரும்புகிறேன்** என்று **பேதுரு** கூறுகிறார். மேலும் அப்.**யோவான்** தனது முதலாம் நிருபத்தில் "**ஆதிமுதல்** இருந்ததும், **நாங்கள் கேட்டதும்,** எங்கள் **கண்களினாலே கண்டதும்,** நாங்கள் **நோக்கிப்பார்த்ததும்**, எங்கள் **கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற** ஜீவவார்த்தையைக் குறித்து **உங்களுக்கு அறிவிக்கிறோம்.** அந்த ஜீவன் வெளிப்பட்டது; **பிதாவினிடத்திலிருந்ததும், எங்களுக்கு வெளிப்பட்டதுமான** நித்தியமாயிருக்கிற **அந்த ஜீவனை** நாங்கள் கண்டு, அதைக் குறித்துச் சாட்சி கொடுத்து, **அதை உங்களுக்கு அறிவிக்கிறோம்.** நீங்கள் எங்களோடே **ஐக்கியமுள்ளவர்களாகும்படி,** நாங்கள் **கண்டும், கேட்டும்** இருக்கிறதை **உங்களுக்கும் அறிவிக்கிறோம்**; **எங்களுடைய** ஐக்கியம் **பிதாவோடும்** அவருடைய குமாரனாகிய **இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது**".(1யோவான் 1:1-3).

இதை நான் கூறக்காரணம், இரண்டாயித்துபத்தொன்பது ஆண்டுகளுக்குப் பின்னர் உண்மையை அறிந்த சாட்சிகளைவிட **பார்க்காத, கேட்காத, தொடாத** தங்களுக்கு அதிகம் தெரியும் என சில மக்கள் கூறுகின்றனர். **லூக்கா** சொல்லும் உண்மையை **மறுப்பவர்கள்** முட்டாள்கள் அல்லது **எதிரிகள்** அவர்களது கூற்றிதனை நீங்கள் நம்பாதீர்கள்.

இப்போது **லூக்கா** எழுதிய காரியங்களை நாம் வாசிப்போம், "யூதேயா தேசத்தின் ராஜாவாகிய ஏரோதின் நாட்களில், பெபயா என்னும் **ஆசாரிய வகுப்பில் சகரியா** என்னும் போர் கொண்ட **ஆசாரியன்** ஒருவன் இருந்தான். **அவன் மனைவி** ஆரோனுடைய குமாரத்திகளில் ஒருத்தி, **அவள் பேர் எலிசபெத்து**, அவர்கள் இருவரும் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள். **எலிசபெத்து மலடி**யாயிருந்தபடியினால், **அவர்களுக்குப் பிள்ளையில்லாதிருந்தது;**

மேலும் இவர்கள் இருவரும் வயது சென்றவாகளாயும் இருந்தார்கள். அப்படியிருக்க, அவன் தன் **ஆசாரிய வகுப்பின்** முறைப்படி தேவசந்நிதியிலே ஆசாரிய ஊழியம் முறைமையின்படி அவன் தேவாலயத்துக்குள் பிரவேசித்துத் **தூபங்காட்டுகிறதற்குச் சீட்டைப் பெற்றான்.** தூபங்காட்டுகிற வேளையிலே **ஜனங்களெல்லாரும்** கூட்டமாய **வெளியே ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தார்கள்"(லூக்கா 1:5-10).**

இங்கே ஓர் அற்புதமான **தம்பதியினரை** நாம் காண்கிறோம். **சகரியா ஓர் ஆசாரியர்** அவருடைய மனைவி எலிசபெத்தும் **ஆரோனுடைய சந்ததி.** எனவே அவர்கள் தேவனுக்கு முன்பாக குற்றமற்றவர்களாய் நடந்து நீதியுள்ள ஒரு வாழ்க்கை நடத்தினார்கள். தேவன் நம்மை **பாவமில்லாதவர்களாய்** மாத்திரம் அல்ல, குற்றமற்றவர்களாய் இருக்கவே எதிர்பார்க்கிறார். "கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி, நான் சர்வவல்லமையுள்ள தேவன்; நீ எனக்கு முன்பாக நடந்துகொண்டு உத்தமனாயிரு என்றார்" (ஆதி.17:1) என்று கட்டளையிட்டார். **இவர்கள்** இவ்விதமாய் **நீதியுள்ளவர்களாய் வாழ்ந்து** வந்தாலும் அவர்களுக்கு **ஒருகுறை** இருந்தது. **அவர்களுக்கு குழந்தையில்லாதிருந்தது.** இருவரும் வயது சென்றவர்களாயும் இருந்தனர். எனவே **இனி குழந்தை பிறக்கும் வாய்ப்பும் இல்லாதிருந்தது.** இது அவர்களுக்கு அதிக மன வருத்தத்தை அளித்தது. ஏனெனில் **பிள்ளைகளே சந்ததியை** உருவாக்குபவர்கள். அக்காலத்திலே அதுவே **வாழ்வின் நிறைவைக் காட்டியது.** இப்படிபட்டமன **துன்பத்தின்** நடுவிலும் அவர்கள் உத்தமர்களாய் வாழ்ந்து வந்தனர். நீங்கள் **செல்வந்தராய்** இருப்பின் அனைத்தும் **நன்றாகவே நடக்கும்.** உங்களுக்கு **துன்பமோ நோயோ** அணுகாது என்று அநேகர் சொல்வார்கள். ஆனால், அவைகள் உண்மையல்ல, ஏமாற்றத்தின் நடுவிலேயும் தேவனுடைய **வார்த்தையிலேயே நாம் நீதிமான்களாய்** வாழவும் முடியும். பக்தன் **யோபைப்போல** துன்பத்தில் உழன்றாலும் **தேவனுக்கு பிரியமான வாழ்வை** அவன் வாழ்ந்தான். அப்படியே நம்மாலும் நடத்த முடியும்.

தேவன் தந்த **வாக்குறுதியை** வாசியுங்கள், **"கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்**; நான் தாழ்ச்சியடையேன். அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார். அவர் என் ஆத்துமாவைத் தேற்றி தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார். நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்" (சங்.23:1-4). **"அவர் என்னை நீதியின்** பாதைகளில் நடத்துகிறார்" என்பதன் **அடுத்த வசனம் "**நான் **மரண இருளின்** பள்ளத்தாக்கில் நடந்தாலும்... என்று கூறுகிறார். **நீதியுள்ள** வாழ்வு நடத்துவதையும் **துன்பமில்லா** வாழ்வு வாழ்வதையும் **நாம் குழப்பிக்கொள்ளக்கூடாது.**

சகரியவுக்கு தேவதூதன் தோன்றி ஒரு தேதியை முன் குறித்துக் கொடுத்தார்;

"அப்பொழுது கர்த்தருடைய தூதன் ஒருவன் தூபபீடத்தின் வலதுபக்கத்திலே நின்று அவனுக்குத் தரிசனமானான். சகரியா அவனைக் கண்டு கலங்கி, பயமடைந்தான். தூதன் அவனை நோக்கி; சகரியாவே, பயப்படாதே உன் வேண்டுதல் கேட்டகப்பட்டது; உன் மனைவியாகிய எலிசபெத்து உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு **யோவான்** என்று பேரிடுவாயாக. உனக்குச் சந்தோஷமும் மகிழ்ச்சியும் உண்டாகும், அவன் **பிறப்பினிமித்தம் அநேகர் சந்தோஷப்படுவார்கள்.** அவன் கர்த்தருக்கு முன்பாகப் பெரியவனாயிருப்பான், திராட்சரசமும் மதுவும் குடியான், **தன் தாயின் வயிற்றிலிருக்கும்போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பான்" (லூக்கா 1:11-15).**

**மலடியாயிருக்கும் உன்னுடைய மனைவி குறித்த காலத்தில்** ஓர் ஆண்மகனைப் பெறுவாள். அவனுக்கு யோவான் என்று பெயரிடுவாயாக. அவன் இவ்வுலகில் அநேக காரியங்களைச் செய்வான் என்ற கூறினார்.

**இச்செய்தியை** சகரியாவால் **நம்பமுடியவில்லை.** "அப்பொழுது சகரியா தேவதூதனை நோக்கி; இதை நான் எதினால் அறிவேன்; நான் **கிழவனாயிருக்கிறேன்,** என் மனைவியும் **வயது சென்றவளாயிருக்கிறாளே"** என்றான். அதற்கு தேவதூதன் அவனுக்குப் பிரதியுத்தரமாக: "நான் தேவ சந்திதானத்தில் நிற்கிற காபிரியேல் என்பவன்; உன்னுடனே பேசவும், உனக்கு இந்த நற்செய்தியை அறிவிக்கவும் தேவனால் அனுப்பப்பட்டு வந்தேன்; இதோ, தகுந்தகாலத்திலே நிறைவேறப்போகிற **என் வார்த்தைகளை நீ விசுவாசியாதபடியினால்** இவைகள் சம்பவிக்கும் நாள்மட்டும் நீ பேசக்கூடாமல் **ஊமையாயிருப்பாய்** என்றான்"(1:18-20). **நியாயமான அவிசுவாசமாய்** இருந்தாலும் **அவிசுவாசத்துக்கு அபராதம்** உண்டு என்பதை நாம் நினைவில் கொள்ளுவோம். **யேவான்** பிறக்கும்வரைக்கும் **சகரியா பேசமுடியாதவராய் ஆனார்,** தேவன் தம்முடைய வார்த்தையில் உரைத்திருப்பதற்கு நாம், **சகரியா** போல் சந்தேகிக்காமல் **என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை**; ஆயினும் **நான் விசுவாசிக்கிறேன், ஆண்டவரே"** என்றே பதில் சொல்லவேண்டும்.

சகரியா-எலிசபெத் தம்பதியினரைப் பற்றிக் கூறிவந்த **லூக்கா** முதலாம் ஆதிகாரத்தின் மையப்பகுதிக்குப் பின்னர் **மற்றொரு கன்னிகையையும்** எதிர்பாராத ஒரு **ஆண்மகனின் பிறப்பையும்** பற்றி உரைக்கிறார். "ஆறாம் மாதத்திலே காபிரியேல் என்னும் தூதன், கலிலேயாவிலுள்ள நாசரேத்தென்னும் ஊரில் தாவீதின் வம்சத்தானாகிய யோசேப்பு என்கிற நாமமுள்ள புருஷனுக்கு நியமிக்கப்பட்டிருந்த ஒரு **கன்னிகையினிடத்திற்கு தேவனாலே அனுப்பப்பட்டான்;** அந்தக் கன்னிகையின் பேர் மரியாள்"(1:26,27).

இங்கே லூக்கா அவர் **தேவதூதரின்** பெயரையும் **அச்சம்பவம் நடந்த இடத்தையும்** பற்றி விவரிக்கிறார். இந்நிகழ்வு கலிலேயா நாட்டில் இருந்த **நாசரேத் கிராமத்தில் நடந்தது** என்று குறிப்பிடுகிறார். வசனம் 27-ல் யோசேப்புக்கு நியமிக்கப்பட்ட ஒரு கன்னிகையைப் பற்றி எழுதுகிறார். **இந்த யோசேப்பு தாவீதின் வம்சத்தில் வந்தவர்.** ஒரு சிறந்த **ஆராய்ச்சியாளர்** தரவேண்டிய அனைத்துக் காரியத்தையும் **துல்லியமாக லூக்கா குறிப்பிட்டுளளார்.** "கிருபை பெற்றவளே, வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார், ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசிர்வதிக்கப்பட்டவள் என்றான். அவளோ அவனைக் கண்டு, அவன் வார்த்தையினால் கலங்கி, இந்த வாழ்த்துதல் எப்படிப்பட்டதோ என்று சிந்தித்துக்கொண்டிருந்தாள்" (வச.28,29) மரியாளைச் சந்தித்த தேவதூதர் **"கிருபை பெற்றவளே வாழ்க!"** என்று வாழ்த்தினார். **புதிய ஏற்பாட்டில் இந்த சொற்றொடர் இங்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது.** இலத்தீன் மொழியில் அநேக பிரதிகளில் **'கிருபையால் நிறைந்தவள்'** என்று தரப்படவில்லை. இங்கு **மரியாளைவிட** அவருக்கு **நடக்கவிருக்கும் காரியமே சிறப்பு செய்தியாகும்.**

"இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய்"(1:31). தேவதூதனின் அறிவிப்பு மரியாளுடைய மகனான **இயேவுகிறிஸ்துவைப்** பற்றியதாகும். "அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. அவர் பெரியவராயிருப்பார். **உன்னதமானவருடைய குமாரன்** என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கேபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது என்றான்.

அதற்கு மரியாள் தேவதூதனை நோக்கி: "**இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்றாள்** (வச.32-34).

**மரியாளுக்கும்** சகரியாவுக்கும் **ஒரேவிதமான கேள்விகள் எழுந்தன.** மரியாளுக்கு இது எவ்வாறு நிகழும் என்று புரியவில்லை. "கன்னியான ஒரு பெண் எப்படி ஒரு மகனைப் பெறுவாள்? அது நிகழாதே என்று எண்ணினாள். சகரியாவின் **அவி சுவாசத்துக்கும்** மரியாளின் **அவிசுவாசத்துக்கும்** உள்ள **வேறுபாட்டை** நாம் கவனிக்க வேண்டும். சகரியாவின் கேள்வியோ "**இதை நான் எவ்வாறு அறிவேன்**?" என்று அவிசுவாசத்தை வெளிப்படுத்தியது. மரியாளின் கேள்வியோ "**இதை விசுவாசிக்கிறேன்**; ஆனால் **எவ்வாறு நிகழும் என்பதை அறியேன்**" என்ற பொருளை உள்ளடக்கியது.

குழந்தைப்பேறு இன்மையோ **கன்னித்தன்மையோ தேவனுக்கு பிரச்சனையே கிடையாது.** கூறப்பட்ட நற்செய்தி என்னவெனில், **"ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்".** அந்நாட்களில் **மரியாள்** எழுந்து, மலைநாட்டிலே யூதாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குத் தீவிரமாய்ப் போய், **சகரியாவின் வீட்டுக்குள்** பிரவேசித்து, எலிசபெத்தை வாழ்த்தினாள். எலிசபெத்து மரியாளுடைய வாழ்த்துதலைக் கேட்டபொழுது, அவளுடைய **வயிற்றிலிருந்த பிள்ளை துள்ளிற்று**; எலிசபெத்து பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டாள்" (வச.39-41).

**யோவான்** ஒரு அசாதாரணமான குழந்தை. தாயின் **கருவிலிருக்கும்பொழுதே தூய ஆவியானவரால் நிறைந்திருந்த அக்குழந்தை** பெண்களிடத்தில் பிறந்த யாவரிலும் பெரியவராயிருப்பார். அக்குழந்தையின் **தாயும் தேவ ஆவியினால் நிறைந்திருந்தார்.** இவ்வித சூழலில்தான் நன்மையான காரியங்கள் வரும். அவற்றை "**ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசிர்வதிக்கப்பட்டவள்,** உன் கர்ப்பத்தின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டது. **என் ஆண்டவருடைய தாயார்** என்னிடத்தில் வந்தது எனக்கு எதினால் கிடைத்தது. இதோ, நீ வாழ்த்தின சத்தம் என் காதில் விழுந்தவுடனே, என் வயிற்றிலுள்ள பிள்ளை களிப்பாய்த் துள்ளிற்று. விசுவாசித்தவளே பாக்கியவதி, கர்த்தராலே அவளுக்குச் சொல்லப்பட்டவைகள் நிறைவேறும் என்றாள்" (வச.42-45). மேலும் இதற்கு மறுமொழியாக பாடியவற்றை **மரியாளின் கீதம்** என்று நாம் அழைக்கிறோம். பழைய ஏற்பாட்டில் அன்னாள் தனது முதல் குமாரனைப் பெற்ற பின்னர் பாடிய **நன்றி கீதத்துக்கு** இது (1 சாமு.2:1-10) ஒத்துள்ளது.

தொடர்ந்து யோவானின் பிறப்பைப் பற்றி லூக்கா "எலிசபெத்துக்குப் பிரசவகாலம் நிறைவேறினபோது அவள் ஒரு புத்திரனைப் பெற்றாள். கர்த்தர் அவளிடத்தில் தம்முடைய இரக்கத்தை விளங்கப்பண்ணினாரென்று அவளுடைய அயலகத்தாரும் பந்து ஜனங்களும் கேள்விப்பட்டு, அவளுடனேகூடச் சந்தோஷப்பட்டார்கள். எட்டாம் நாளிலே பிள்ளைக்கு விருந்தசேதனம்பண்ணும் படிக்கு அவர்கள் வந்து, அதின் தகப்பனுடைய நாமத்தின்படி அதற்குச் சகரியா என்று பேரிடப்போனார்கள். அப்பொழுது அதின் தாய்; அப்படியல்ல, அதற்கு **யோவான்** என்று பேரிட வேண்டும் என்றாள். அதற்கு அவர்கள் **உன் உறவின் முறை யாரில்** இந்தப் **பேருள்ளவன் ஒருவனும் இல்லையே** என்று சொல்லி, அதின் தகப்பனை நோக்கி; இதற்கு என்ன பேரிட மனதாயிருக்கிறீர் என்று சைகையினால் கேட்டார்கள்" (1:57-62) என இவ்விஷயத்தை குறித்து லூக்கா விவரமாக எழுதியுள்ளார். பொதுவாகக் **குழந்தைக்கு தகப்பன்** பெயரையோ அல்லது **மூதாதையரின்** பெயரையோ வைப்பது **மரபு**. ஆனால் கணவன்-மனைவி இருவரும் எந்த **ஒரு விவாதமும்** இல்லாதபடி அக்குழந்தைக்கு **யோவான்** என்று பெயரிட முடிவெடுத்தனர். ஏனெனில் எலிபெத்துக்கும் சகரியாவுக்கும் **யோவான்** என்று அக்குழந்தைக்குப் பெயரிடுவதற்கு **தேவதூதன்** ஏற்கனவே கட்டளை கொடுத்திருந்தார்.

லூக்கா எழுதின நற்செய்தி நூலை **"பெண்களில் நற்செய்தி"** என்று அழைக்கலாம். **ரோம** சாம்ராஜ்யத்தில் **பெண்களுக்கு** எந்தவொரு **முக்கியத்துவமோ உரிமைகளோ** கிடையாது. ஆனால் **லூக்கா** தன் **நூலில்** பல இடங்களில் பெண்களை முக்கியத்துவப்படுத்தி எழுதியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஆலோசனை- ஜெபத்துக்கு தொடர்புக்கொள்பவர்கள் கவனிக்கவும்:

**ஒவ்வொரு மாதத்திலும்** வாரத்தில் **செவ்வாய்கிழமை** முதல் **புதன் மதியம் வரை** மட்டுமே நான் வீட்டில் **சேலத்தில் இருப்பேன்.** ஆலோசனைக்கும்-ஜெபத்துக்கும் நேரில் **சேலம்** (தமிழ்நாட்டுக்கு) வர விரும்புகிறவர்கள், முன்பதாகவே நீங்கள் என்னை சந்திக்க விரும்பும் தேதிகளை கடிதத்தில் குறிப்பிட்டு எழுதி கேட்டு எங்களிடமிருந்து பதில் பெற்றப்பின் அல்லது போனில் தொடர்புகொண்டு சந்திக்கும் நாளை உறுதிப்படுத்திக்கொண்டு வரவும். தொலைப்பேசியில் ஆலோசனை பெறுகிறவர்கள் வேதவசன சந்தேகம் கேட்கிறவர்கள், ஜெப குறிப்புகளை பகிர்ந்துக்கொள்கிறவர்கள் காலை 8மணியிலிருந்து இரவு 11மணிவரை தொடர்புக் கொள்ளலாம். (**தினசரி** மதியம் 2 மணியிலிருந்து மாலை 5மணிவரை போனில் தொடர்புக்கொள்ள முயலவேண்டாம்.) குறிப்பிட்ட அந்த நேரம் நேரில் வருபவர்களுக்காக ஜெபிக்கும்நேரமாகும். மேலும் அது **நாங்கள் ஓய்வு** எடுக்கும் நேரமுமாகும்.

அந்த **3மணி நேரம் எங்கள் தொலைபேசியை ஆப் செய்து வைத்து விடுவோம்** என்பதை நீங்கள் அறிய விரும்புகிறேன்.

' வடஇந்திய ஊழியங்களுக்கு நான் சென்றால் **செவ்வாய்கிழமையிலும் நான்** வீட்டில் இருக்கமாட்டேன் என்பதையும் அறியவும்.

# விதைத்தால் மட்டும் போதுமா?

கண்ணீரோடே **விதைக்கிறவர்கள்** கெம்பீரத்தோடே அறுப்பார்கள்(சங்.126:5). ஆனால் **விதைப்பதோடு முடிந்துவிடுவதில்லை** ஒரு விவசாயியின் வேலை. விதை முளைத்தபின் நாற்றங்காலிலிருந்து எடுத்து சீரான இடைவெளியில் **நாற்றை நடுகிறான்**; கருத்தாய்த் தொடர்ந்து கண்காணித்து **நீர்ப்பாய்ச்சுகிறான்**; **களையெடுக்கிறான்**; **உரமிடுகிறான்; பூச்சி மருந்தைத் தெளிக்கிறான்.** ஏன், நல்ல விளைச்சலுக்கான **பல்வேறு முயற்சிகளையும்** மேற்கொள்கிறான். விளையச் செய்கிற தேவன் அவனுடைய முயற்சிக்கேற்பத் தமது சித்தத்தினபடி 30,60,100 என்று பலன் தருகிறார். விதைப்பதற்கு **முன்னும்** அதற்குப் **பின்னும்** அவன் மேற்கொள்ளும் பிரயாசைகளும், **அடையும் வேதனைகளும் கொஞ்சநஞ்சமல்ல.**

வேதனைகளின் உச்சத்தைப் பொதுவாகப் **பிரசவ வேதனை** என்று குறிப்பிடுவார்கள். **"முட்டையிடும் கோழிக்கல்லோ வலி தெரியும்"** என்பது பழமொழி. அடைகாத்துக் குஞ்சு பொரிக்குமட்டும் அது சீராகத் **வெப்பம் தன் கிடைக்கும் வகையில்** முட்டைகளைத் தன் **அலகினால்** சுழற்றி ஒழுங்குபடுத்திப் **பேணிப் பாதுகாப்பதை** உற்றுக் கவனித்திருக்கிறீர்களா? கர்ப்பிணிப்பெண் தன் வயிற்றிலுள்ள சிசுவை ஈன்றெடுக்கும் வரை அந்தப் **பத்து மாதங்களளவும்** தன்னை எப்படியெல்லாம் **வருத்தி** ஒறுத்து அதைத் தொடர்ந்து பேணிப் **பாதுகாக்கிறாள்** என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? **நற்செய்தி அறிவித்தல்** என்பது ஊழியத்தில் **ஒரு துவக்கம்** ஆகும். ஆனால் **அது முடிவல்ல.** அது **விதைத்தலே, அது அறுவடையாகிவிடாது.** இவ்விஷயத்தில் பவுல் நமக்கு மிகச்சிறந்த முன் மாதிரி.

**கலாத்தியருக்கு** எழுதுகையில் "என் சிறு பிள்ளைகளே, **கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும்** உங்களுக்காக மறுபடியும் **கர்ப்பவேதனைப்படுகிறேன்**"(கலா.4:19) என்றுகுறிப்பிடுகிறார்.

கொரிந்தியருக்கு எழுதும்போது "கிறிஸ்து இயேசுவுக்குள் **சுவிசேஷத்தினால்** நான் **உங்களைப்பெற்றேன்.** ஆகையால் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்(1கொரி 4:15,16) என்கிறார்.**"பால் கொடுக்கிற தாயானவள் தன் பிள்ளைகளைக் காப்பாற்றுகிறது போல"** "**தகப்பன் தன் பிள்ளைகளுக்குச்** சொல்லுகிறதுபோல"(1 தெச.2:7,8,12) என்ற அவருடைய **சொற்றொடர்கள்** ஆத்துமாக்களைக் குறித்த அவருடைய **கரிசனையைக்** குறிப்பிடுகின்றன அல்லவா? குழந்தையைப் பெற்றுவிட்டதோடு **தாயின் கடமை** முடிந்துவிடுவதில்லை. ஈன்ற பொழுதிற் வகையில் பெரிதுவக்கும் அதைச் **சான்றோறாக்குதல்** அதனினும் இன்றியமையாததல்வா? பவுல், பர்னபாவிடம், "**நாம் கர்த்தருடைய வசனத்தை அறிவித்திருக்கிற பட்டணங்களிலுமுள்ள சகல சகோதரர்கள் எப்படியிருக்கிறார் களென்று போய்ப் பார்ப்போம் வாரும்"**(அப்.16.30) என்கிறான். என்னே ஆத்துமாக்களைக் குறித்த பாரம்!

ஊழியத்தில் **பின்தொடர்பணியை** நாம் அசட்டை செய்வேமெனில் **கெம்பீரத்தோடே அறுப்பது எப்படி?** ஐயரண்டு திங்கள் அரும்பாடுபட்டுப் **பெற்ற குழந்தையைக்** குப்பைத் தொட்டியில் வீசியெறிந்தது போலாகிவிடுமல்லவா? சிந்திப்போம்.

# தெற்கு கேரளா CSI டையோசிஸ்
# பேயாடு CSI சேகரம் மிஷனரி பிரதிஷ்டை கன்வென்ஷன்.










(திருவனந்தபுரம்) **பேயாடு** CSI சபை கூட்டங்கள் மிகவும் ஆசிர்வாதமாக அமைந்தது. கூட்டத்துக்கு தெற்கு கேரளா டையோசிஸ் **பிஷப் Rt.Rev.ரசலம்** அவர்கள் தலைமை உரையாற்றி சபை சார்பில் அனுப்பப்படும் மிஷனரியை பிரதிஷ்டை செய்தார்.

அவர் பேசும் போது: டையோசிஸ்ஸில் ஒருவர் ஆயராகும் முன் **மிஷனரி** ஊழியத்தில் ஒன்று இரண்டு வருடம் **மிஷனரி ஊழிய பயிற்சி** பெற வேண்டும். அதற்காக நான் **ஆந்திர** மாநிலம் **ஏட்டூர் நகரம்** என்ற சிறிய கிராமத்தில் ஊழியம் செய்ய அனேக ஆண்டுகளுக்கு முன் டையோசிஸ்ஸிஸ் மூலம் அனுப்பப்பட்டேன். அப்போதுதான் **Dr.புஷ்பராஜ்** அவர்கள் **ஆதிவாசிகளிடையே** ஊழியம் செய்ய **ஆந்திரா** மாநிலம் **ஏட்டூர் நகரம்** என்ற குக்கிராமத்துக்கு வந்திருந்தார், நான் சிறுவயதில் டாக்டர் அவர்களின் கூட்டத்தில் கலந்துக்கொடிருக்கிறேன் அவரை தூரத்தில் **மேடையில்** கண்டேன். அப்படிப்பட்ட பிரசித்தி பெற்ற பிரபல டாக்டா அவர்கள் இந்த **கிராமத்தில்** அந்த **சிறிய வீட்டில்** தரையில் உட்கார்ந்து **அலுமினிய தட்டில்** மதிய உணவு சாப்பிட்ட அவரின் அந்த **தாழ்மை** எனக்கு பாடமாக அமைந்தது. அந்த கிராமவாசிகளுடன் **Rev.ஜான்விக்டர்** அவர்கள் **தெலுங்கில்** மொழி

பெயர்க்க டாக்டர் அவர்கள் கிராம மக்களுக்கு புரியும் வகையில் சுவிசேஷம் அறிவித்தார். இன்று அவருடன் ஒரே மேடையில் அமர்ந்து உள்ளது, எனக்கு சந்தோஷம் கொடுக்கிறது. அவர் பத்திரிகையில் பல விமர்சனங்கள் எழுதினாலும் **Dr.புஷ்பராஜ்** அவர்களின் தன் சபையான CSI சபைகளைப்பற்றி அவரின் **வைராக்கியம்**, அவரின் **பாரம்**,ஆகியவைகள்தான் அவரைப்பற்றிய விமர்சனங்கள் எவ்வளவு எழுந்தாலும் அவரை அனைத்து CSI சபைகளும் தொடர்ந்து உபயோகிக்கிறார்கள் என்று புகழ்ந்து பேசினார். தெற்க்கு கேரளா டையோசிஸ் உதவி சேர்மேன் ஆயரும், டையோசிஸ்லே செயலர் டாக்டர் அவர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டு வாழ்த்தினர். தொடர்ந்து 3 நாட்கள் கர்த்தருடைய வசனத்தை பகிர்ந்துக் கொண்டேன். கர்த்தர் நாமம் மகிமைப்பட்டது.

## வாசகர்கள் கவனிக்கவும்:

ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட தேதியில் ஜாமக்காரன் பத்திரிக்கையை அனுப்ப இயலவில்லை. ஊழியம் அதிகமாக இருப்பதினாலும், மலையாள மொழியில் ஜாமக்காரன் பத்திரிக்கையை மொழிபெயர்ப்பதற்காக ஒவ்வொரு மாதமும் நான் கேரளா மாநிலத்துக்கு போய் வர வேண்டியிருப்பதால் ஜாமக்காரனை குறிப்பிட்ட தேதியில் அல்லது வாரத்தில் தபாலில் சேர்க்க முடியவில்லை. எனக்கு மலையாளம் எழுதவோ - படிக்கவோ தெரியாது. மலையாள மொழியில் பிரசங்கம் செய்ய மட்டும் கர்த்தர் எனக்கு கிருபை தந்தார்.

ஆகவே வாசகர்கள் இதை புரிந்துக்கொண்டு ஒவ்வொரு மாதமும், கடைசி வாரம் கடைசி தேதிக்குள் ஜாமக்காரன் உங்கள் விலாசத்துக்கு வந்து சேராவிட்டால் மட்டும் உங்களுக்கு ஜாமக்காரன் கிடைக்கவில்லை என்பதை எனக்கு அறிவிக்கலாம் அல்லது தொலைபேசியில் அறிவிக்கலாம். ஆகவே அந்தந்த மாதம் கடைசி வாரம்வரை கடைசி தேதி வரை பொருமையோடு இருந்து அதன்பிறகு என்னிடம் விசாரிக்கலாம்.

நீங்கள் அறிவிக்காமல் யாருடைய விலாசத்தையும் நாங்கள் நீக்கவேமாட்டோம். உங்களுக்கு அனுப்பப்படும் ஜாமக்காரன் தபால்துறையிலிருந்து எங்களுக்கு திரும்ப வந்தால்மட்டும் உங்கள் விலாசத்தை உடனே நீக்கிவிடுவோம். மறுபடியும் நீங்கள் எங்களுக்கு எழுதி கேட்டால் உங்கள் விலாசத்தை கம்பியூட்டரில் பதிவுசெய்து புதிய நெம்பர் உங்களுக்கு கொடுக்கப்படும். பழைய நெம்பர் கொடுக்கப்படாது. உங்கள் ஒத்துழைப்புக்கு நன்றி.

## என் தொலைபேசி:

கூடியவரை என்னோடு கடித தொடர்பு அல்லது இ-மெயில் மூலம் தொடர்பு கொள்ள முயலுங்கள். என் தொலைபேசி தொடர்பு செவ்வாய்,புதன் ஆகிய நாட்களில் லைன் கிடைப்பது கடினம். அதனால் நான் தொலைபேசியை உபயோகிப்பதேயில்லை என்று நினைத்து சலித்துக்கொள்கிறார்கள். பலருக்கு கோபமும் உண்டாகிறது. பகலில் மற்றவர்களுக்கு ஆலோசனை கொடுக்கும்போதும் மற்றவர்களுடன் இணைந்து ஜெபிக்கும்போதும் போனை எடுத்து கீழே வைத்து விடுகிறேன். இதுதான் உண்மையான பிரச்சனை வேண்டுமென்றே நான் போனை துண்டிப்பதில்லை.

# கன்னியகுமரி CSI டையோசிஸ் குட்டைகோடு சேகர ஐக்கிய கன்வென்ஷன்







கன்னியா குமரி CSI டையோசிஸ்ஸில் குட்டைகோடு பகுதியின் சேகரத்தில் உள்ள அனைத்து CSI சபை சார்பிலும் நடத்தப்பட்ட ஐக்கிய கன்வென்ஷன் பிப்ரவரி மாதம் மிகச் சிறப்பாக நடைப்பெற்றது. CSI சேகர தலைமை ஆயர் **Rev.P.யோனத்தான்** அவர்கள் உதவி ஆயருடன் சேகரத்து அனைத்து ஆயர்களும் ஒவ்வொரு நாள் கூட்டத்திலும் தங்கள் சபை மக்களோடு வந்து கூட்டத்தில் கொண்டு கலந்து கூட்டத்தை சிறப்பித்தார்கள்.

மக்கள் அனைவரும் வசனங்களையும் செய்தியையும் மிக்க ஆவலாக கவனித்ததை அறிந்ததால் பிரசங்கம் செய்த எனக்கும் இன்னும் கூடுதல் நேரம் பிரசங்கம் செய்ய தூண்டிற்று. கர்த்தரின் நாமம் மகிமைபட்டது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

# மதுரை-ராமநாதபுரம் CSI டையோசிஸ்

**வெப்** ஞாபகார்த்த CSI சபை (மதுரை) **பொன்னகரம்** கன்வென்ஷன்.

மதுரையிலுள்ள மிகப்பெரிய இரண்டு சபைகளில் ஒன்றுதான் Webb Memorial CSI Church. இங்கு நடந்த கூட்டங்கள் ஆசிர்வாதமாக நடந்தது. ஆவிக்குரிய கூட்டங்களில் ஆவிக்குறிய செய்திகளை கேட்பதில் இந்த சபையில் பலர் அதிகநாட்டம் உள்ளவர்களாக என்னால் உணர முடியவில்லை. ஆனால் கடைசி இரண்டு நாட்களில் நான் பேசிய செய்தி பலரை தொட்டன என்று உணர முடிந்தது. பலர் எங்களுக்காகவே கர்த்தர் பேசியதுபோல இருந்தது என்றனர்.



மேலும் சபையின் தலைமை ஆயர் Rev.R.David Udaya Kumar அவர்களிடம் கூட்டம் முடிந்தவுடன் ஆயரிடம் நேரிடையாக வந்து இப்படிபட்ட செய்தியாளரை நம் சபைக்கு நீங்க கன்வென்ஷன் நடத்த ஏற்பாடு செய் தருக் கு உங்களுக்கு நன்றி கூறுகிறோம் என்று ஆயரிடம் கூறியதை நானே கேட்டு தெய்வத்தை துதித்தேன்.



கர்த்தர்தாமே வெப் CSI சபையையும், மதுரை திருமடைலத்தையும் ஆசீர்வதிப்பாராக. சபை தலைமை ஆயர் **Rev.டேவிட் உதயகுமார்** அவர்கள் மிகுந்த ஜெப ஆயத்தத்தோடு இக்கூட்ட ஏற்பாடுகளை செய்திருந்தார் கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக. சபை செயலர் அவர்கள் என்னை வரவேற்று பேசினார்.

இந்த சபையை கஷ்டப்பட்டு உருவாக்கிய **Rev. Edward Webb** அவர்களின் முயற்சியும் அருகேயே பிரசித்தி பெற்ற **Capron Hall** பள்ளிக்கூட்டத்தையும் உருவாக அவரே காரணமாக இருந்தவர் என்பதற்காக நாம் கர்த்தரை துதிப்போம்.

சரித்திர பிரசித்திபெற்ற இந்த வெப் ஞாபகார்த்த சபை **100ம் வருஷத்தை** சந்திக்கப்போகிறது. இப்படிப்பட்ட மிஷனரி ஆயர்களுக்காக நாம் தேவனை துதிப்போம். அவர்கள் விட்டுப்போன சபை மற்றும் பள்ளிக்கூடங்களை தொடர்ந்து பாதுகாப்போம்.

# ANGLICAN EPISCOPAL CHURCH OF INDIA (Mumbai)
# HOME OF FAITH TAMIL CONGREGATION (THANE)

## விசுவாச வீடு தமிழ் சபை (சுபாஷ் நகர், தானே) மும்பை

## சபையின் வாலிபர் பண்டிகை கூட்டங்கள்




**மும்பை** (தானே)யில் உள்ள **சுபாஷ் நகர்,** விசுவாச வீடு தமிழ் சபையின் வாலிபர் பண்டிகையாக 3 நாட்கள் கன்வென்ஷன் நடத்த அழைக்கப்பட்டேன். **Rev.John Jermia** அவர்களும் சபை நிர்வாகிகளும் கூட்ட ஏற்பாட்டை மிக சிறப்பாக செய்திருந்தனர். இதுவரை **எலக்ஷன் நடத்தாத** சபை என்பதில் இந்த சபை சாட்சி பெற்றது. அதே சமயம் ஜனநாயகமுறையில் சபையின் **நிர்வாகிகளை** இவர்களாகவே தெரிந்தெடுத்து **ஒரு மனதாக சபையை** இவர்கள் நடத்துகிறார்கள். இரண்டு கிளை சபைகளும் இதற்கு உண்டு.

இச்சபையினர் **வசனத்தை கேட்கும்** ஆவல் உள்ளவர்களாக இருந்ததால் என் பிரசங்கத்துக்கு நேர கட்டுப்பாடு இல்லாமல் பிரசங்கம் செய்ய எனக்கு சுதந்திரம் கொடுத்தனர். கடைசி நாள் புற **ஜாதியினரும்** சுவிசேஷம் கேட்கட்டும் என்ற நோக்கத்தோடு **திறந்த வெளியில் ஹிந்தி மொழி** பெயர்ப்புடன் கூட்ட ஏற்பாடுகளை ஒழுங்கு செய்திருந்தனர். வந்த ஆத்துமாக்களுக்கு ஏற்ப செய்தியளிக்க ஆவியானவர் எனக்கு உதவினார். மொழிபெயர்ப்பும் பிசிறில்லாமல் தெளிவாக அமைந்தது. கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக.

# கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்



Dr. மனோ பால்கமலேசன்.



Dr. கமலேசனுடன் அவரின் செல்ல மகன் மனோ தம்பதியினர்.

**Dr. Rev.Samuel T.Kamalesan** அவர்களின் மகன் **Dr.மனோ பால் கமலேசன்** அவர்கள் இஸ்லாமிய தீவிரவாதிகள் அதிகம் உள்ள நாடான **ஆப்கானிஸ்தானத்தில்** முதல் மைக்ரோ நிதி வங்கியின் (First Micro Finance Bank) தலைமை நிர்வாக அதிகாரியாக (CEO) பணியாற்றி வந்தார். கடந்த ஒரு மாதத்துக்குமுன் 2019 ஜனவரி 14ம் தேதி ஆப்கானிஸ்தானத்தில் (காபூல்) நகரில் பயங்கரவாத தாக்குதலில் ஈடுபட்ட (Truck Bomb) டிரக் குண்டு வெடிப்பில் பலியானார்.

சகோ. மனோ அவர்கள் தனது 11ம் வயதில் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்று இயேசு கிறிஸ்துவை பின்பற்றினார்.

மற்றவர்களுக்கு உதவும் சமூக பணியில் மிகவும் நாட்டம் கொண்டு பலரும் போக பயப்படும் ஆபத்தான நாடுகளுக்கு செல்வது இவரது ஆசை யாரும் இவரது முதல் பயணமாக **ஆப்பிரிக்கா** நாடுகளில் ஒன்றான **கைரோபிக்கு** பயணமாகும்போது தகப்பனார் Rev.Sam Kamalen அவர்கள் மகனே நீ போகும் இடத்தின் பணி மிக ஆபத்தானது என்று அவரிடம் கூறி பார்த்தார். ஆனால் அந்த மாதிரியான ஆபத்தான நாடுகளின் தேவைக்கு நான் போவது தான் தனக்கு உற்சாகம் என்பது போல் புறப்பட்டார். அதைப்போலவே **கிழக்கு ஐரோப்பா,** ஆசியா நாடுகள்,**ஆப்பரிக்கா** நாடுகள் இப்படி பல முக்கிய நாடுகளில் கடந்த 30 ஆண்டுகளாக பணியாற்றி வெற்றியோடு திரும்பினார். ஆனால் இம்முறை பயங்கரவாதிகள் வைத்த பாம் வெடிக்கும்போது மகன் **மனோ பால்** அவர்களும் அதில் அகப்பட்டு மரித்துப்போனார்.

மனோ தன் பிள்ளைகளை, மனைவியை மிகவும் நேசிப்பார். மகன் மனோவின் மனைவி Mrs.நிக்கோல் இவர்களுக்கு 3 பிள்ளைகள்.

கர்த்தர்தாமே மகன் **மனோ** அவர்களின் மனைவி-பிள்ளைகளுக்கு ஆறுதல் அளிப்பாராக. குறிப்பாக Dr.சாம் கமலேசன் அவர்களுக்கு கூடுதல் ஆறுதலை கர்த்தர் அருள்வாராக. காரணம் சமீபத்தில் தான் சகோதரன் சாம் கமலேசன் அவர்களின் மனைவியின் மரணம் பெரும் இழப்பாக அவர் மனதை பாதித்தது. இப்போது அப்பாவை மிகவும் நேசிக்கும் குடும்ப பொருப்புள்ள மகன் **மனோவின் குரூரமான மரணம்** அண்ணாரின் மனதை மிகவும் வேதனைப்படுத்தியிருக்கும். ஆகவே அவருக்கு ஆவியானவரின் கூடுதல் ஆறுதல் தேவை. ஆகவே நாம் யாவரும் Dr.Rev.Sam Kamalesanக்காக ஜெபிப்போம்.

**நண்பர் சுவிசேஷ ஜெபகுழுவின்**(FMPB) **ஸ்தாபகரில்** ஒருவரும்,**டேனிஷ்பேட்டை பெத்தேலை** தொடங்கியவர்களுள் ஒருவரான **Dr.Rev.Sam Kamalesan** அவர்களுக்கும், மகன் குடும்பத்தினருக்கும் **ஜாமக்காரன்** வாசகர் சார்பிலும், எங்கள் குடும்பத்தின் சார்பிலும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்.

## STATEMENT OF OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT NEWSPAPER JAMAKKARAN (FORM IV)

| | | |
|---|---|---|
| 1. Title of the news paper | : | **JAMAKKARAN** |
| 2. Language(s) in which it is published | : | **TAMIL / MALAYALAM** |
| 3. Place of publication | : | 89,Majeeth Street,<br>Old Suramangalam,<br>Salem - 636 005. |
| 4. Periodicity of its publication | : | Monthly |
| 5. Printer's name | : | M.Velu |
| (whether citizen of India) | : | Indian |
| Address | : | P.M.Press<br>168,Arumuga Nagar, Salem-636 005 |
| 6. Publisher & Editor's name | : | **Dr.M.G.E.PUSHPARAJ** |
| (whether citizen of India) | : | Indian |
| address | | 89,Majeeth Street, Old Suramangalam.<br>Salem - 636 005 |

I, **Dr.M.G.E.PUSHPARAJ** hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Dated:
1.3.2019

**Dr.M.G.E.PUSHPARAJ**
Signature of Publisher & Editor

எச்சரிக்கை! எச்சரிக்கை!!

# அமெரிக்க ஜாமக்காரன் ஜெப விசுவாசிகளுக்கு:

**அமெரிக்காவில் உள்ள ஜாமக்காரன் ஜெப விசுவாசிகள் மட்டுமல்ல, அனைத்து சபை இந்திய கிறிஸ்தவர்களுக்கும் பிரதான ஜெபகுறிப்பு:**

அடுத்த அமெரிக்கா ஜனாதிபதியாக இரண்டு பெண் வேட்பாளர்கள் நிற்கிறார்கள். அதில் ஒருவர் அமெரிக்காவின் **இண்டியானா** மாநிலத்தில் பிறந்த இந்திய வம்சாவளியை சேர்ந்தவர். இவர் பெயர் Mrs.**துளசி.** வயது 37. இவர் இந்துமத வைராக்கியம் நிறைந்தவர். மத வைராக்கியம், கடவுள் வைராக்கியம் பிரச்சனை உண்டாக்காது, ஆனால் **மதவெறி**தான் மிக ஆபத்தானது. Mrs.துளசி 21ம் வயதில் அமெரிக்கா செனட் உறுப்பினராக தெரிந்தெடுக்கப்பட்டார்.



Mrs.**துளசி.**

2012ம் வருடம் அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் முதல் **இந்துமத பிரதிநிதியாக** தேர்ந்தெடுக்கப்பட்டார் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். இந்துமதத்தின் மீது அவருக்குள்ள வெளிப்படையான வைராக்கியம் அவரை இந்துமத பிரதிநிதியாக பதவியில் அமர வைத்தது. இந்துமதத்தின் மீதுள்ள இவருக்குள்ள வெறி தன் **செனட்** பதவி பிரமாணத்தின்போது அமெரிக்கா வழக்கப்படி பைபிளின் மீது கை வைத்து பதவி பிரமாணம் எடுத்துக்கொள்வார்கள். ஆனால் இவரோ தன்னோடு எப்போதும் வைத்திருக்கும் **பகவத்கீதை** புத்தகத்தின்மீது கை வைத்து பதவி பிரமாணம் செய்தது யாவரையும் ஆச்சரியப்பட வைத்தது.

மேலும் அவர் அன்று கூறிய சாட்சி என்ன தெரியுமா?: ஈராக் போரின் போது மத்திய கிழக்கு நாடுகளுக்கு தான் பணியாற்ற போருக்கு நடுவே தங்கியிருந்தபோது யுத்த பயம் நிறைந்த சூழ்நிலையில் **பகவத்கீதை** தனக்கு ஆத்மீக தைரியத்தையும் ஆறுதலை அளித்தது என்றார். ஒரு கிறிஸ்தவர்கூட அமெரிக்க செனட்டில் இப்படி சாட்சி சொல்லியிருக்கமாட்டார்கள். இவர் இந்தியாவில் பிறக்கவில்லை என்றாலும் சிறுவயதிலேயே **இந்து தெய்வங்களை** வணங்குவதும், இந்திய கலாச்சாரத்தை அப்படியே பின்பற்றுவதுமாக வாழ்ந்தவர். நம் இந்திய பிரதமர் இரண்டுமுறை இவரை தனியாக சந்தித்து பேசி பழகி நெருங்கின தொடர்புக்கொண்டவர்.

இவர் அமெரிக்கா ஜனாதிபதியாக வெற்றி பெற்றால் இந்தியர்களின் வேலை பெருவதில் ஜனாதிபதி **திரு.டிரம்ப்** உண்டாக்கிய தடைகளை நீக்கி உதவுவார் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. ஆனால் அமெரிக்காவில் உள்ள பத்திரிக்கையாளர்கள்,மீடியா யாவரும் தான் **இந்து மதத்தை** சார்ந்தவரானதால் தன்னைப்பற்றி வெறுப்பு விமர்சனம் செய்வதாக இவர் கூறுகிறார். ஒரு பத்திரிக்கை இவரை Hindu fenatick என்றும், RSS தொடர்புள்ளவர் என்றும் வெறுப்புடன் விமர்சிப்பதாக இவர் கூறி வருத்தப்பட்டதாக செய்தி கூறுகிறது.

**உபியில்** கிறிஸ்தவர்கள் தாக்கப்படும்போதும், **ஒரிசாவில்** மிஷனரி **டாக்டர்.ஸ்டெயின்ஸ்** குடும்பம் **இந்துமத தீவிரவாதிகளால்** கொலை செய்யப்பட்டபோதும் அமெரிக்கா ஜனாதிபதிகள் **இந்திய பிரதமருக்கு எச்சரிப்பு** கொடுத்தனர். இப்படி கிறிஸ்தவர்கள் தொடர்ந்து தாக்கப்பட்டால் அமெரிக்கா இந்திய விஷயத்தில் **தலையிட வேண்டிவரும்** என்று பகிரங்கமாக **எச்சரிப்பு** கொடுத்தப்பின்தானே **RSS,பஜரங்தள்** வெறி ஆட்டம் குறைந்தது.

ஆனால் ஒரு இந்துமத வெறி கொண்ட Mrs.**துளசிகப்பார்ட்** அவர்கள் ஜனாதிபதியானல் கிறிஸ்தவர்களுக்கு இவர் அரணாக இருக்கமாட்டார். Mrs.துளசிகப்பார்ட்டுக்கு போட்டியாக நிற்கும் **Mrs.கமலாஹாரிஸ்** அவர்களும் இந்திய வம்சாவளியை சேர்ந்தவர். பூர்விகம் **சென்னையில்** பெசன் நகரில் உள்ள குடும்பம் ஆகும். இவர் தாய் **சியாமளா** இவர் ஆப்பிரிக்கர்(ஜமைக்கா) ஹாரிஸை திருமணம் செய்ததால் ஆப்பிரிக்கா-இந்திய வம்சாவளி எனலாம்.



**Mrs.கமலாஹாரிஸ்**

இப்போதுள்ள அமெரிக்கா ஜனாதிபதி **திரு.டிரம்ப்** அவர்களை எதிர்த்து 2020ல் நிற்கப்போகும் இரண்டு பெண்களில் **கமலா ஹாரிஸ்** அவர்களுக்கு முன்னாள் அதிபர் **ஒபாமா** முதல் **இந்தியர் பெரும்பான்மையினர்** தங்கள் ஆதரவை தெரிவிக்கின்றனர்.

ஆகவே இப்போதே அமெரிக்கா வாழ் இந்திய கிறிஸ்தவர்கள் இந்தியாவில் உள்ள அனைத்து கிறிஸ்தவ சபையினரும் தெய்வ சித்தம் நிறைவேறவும், அமெரிக்கா வரை பரவியுள்ள **இந்துமத வெறியர்** யாரும் **ஜனாதிபதிக்கு** தெரிந்தெடுக்கபட அனுமதிக்கவேண்டாம் என்று ஜெபத்தில் நினைவு கூறுவோம். **இது அவசர ஜெப அறிவிப்பாகும்.**

## ஆன்-லைன் பேங்கிங் (ONLINE BANKING)

காணிக்கையை மணிடிரான்ஸ்ப்பர்(NET Transfer) வழியாக அனுப்ப விரும்புகிறவர்களுக்கு என்னுடைய வங்கி தகவல்கள்:

**A/c Name : Dr. M.G.E.PUSHPARAJ :**

வெளிநாட்டில் உள்ளவர்கள் காணிக்கை அனுப்ப (**Overseas Doners):**

**1). Bank Name : State Bank of India - Srirangapalayam Branch - SALEM -1970**

**A/c No. 10764116842, Swift code: SBININBB637**

இந்தியாவில் உள்ளவர்கள் காணிக்கையை அனுப்ப **(India Doners):**

**IFSC CODE : SBIN0001970- A/c No.10764116842**

2) **Bank Name: CANARA BANK, (Suramangalam Branch) - 1219**

வெளிநாட்டில் உள்ளவர்கள் காணிக்கை அனுப்ப(**Overseas Doners):**

**SWIFT CODE: CNRBINBBSLM - A/c No. 1219101013622**

இந்தியாவில் உள்ளவர்கள் காணிக்கையை அனுப்ப**India Doners:**

**IFSC CODE : CNRB0001219 - A/c No. 1219101013622,**

**MICR CODE: 636015005.**

## சத்திய வசன வானொலி நிகழ்ச்சிகள்

ஒவ்வொரு வாரமும் **திங்கள், செவ்வாய்** ஆகிய இரு நாட்களில் Fபீபா வானொலியில் ஒலிப்பரப்பாகிறது. காலை 7-00 மணிக்கு மத்திய அலை வரிசையில் MW 873 khz மீட்டரில் ஒலிப்பரப்பாகிறது.



# TRIBAL MISSION ANNUAL CONVENTION

**(புதுகுடி) நாகர்கோவில்**

நாள் : **2019 MAY 10,11,12.**

இடம் : CSI **புதுகுடி பாஸ்ட்ரேட் சர்ச்** (நாகர் கோவில்)

செய்தி : **Dr. K. முரளிதர்**(ஆனைக்கட்டி)
General Secretary (Tribal Mission)

**Dr. புஷ்பராஜ்** (சேலம்)



*தொடர்புக்கும் மற்ற விவரங்களுக்கும் :*

**Rev. N. ஜெசின்,** CSI Pudukudi Pastrate Church, Nagercoil, Mob. : 9443432661

**MARCH - 2019**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.